[illegible]

[illegible] 8 [illegible] 8

March 1935

[illegible]

[illegible]

N30·8·8·

186949

1783

1783

REGD. No. M. 2302

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பல[illegible]

சைவமுந் தமிழுந் தழைத்தினி[illegible]தோங்குக.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MAR 193[illegible]
MADRAS



# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு அ. § பலவான்குடி—பவ—பங்குனி § திங்கள் அ.

| எண் | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| க. | இந்து மடங்கள் மசோதா ... | 181 |
| உ. | மதிப்புரை மஞ்சரி ... | 183 |
| ௩. | நமது கடமை ... | 185 |
| ச | இலங்கை நகரத்தார் சங்கம், கொழும்பு. ... | 188 |
| ரு. | கூட்டுக் கமிட்டி அறிக்கையைக் குறித்து விண்ணப்பம் | 189 |
| சு. | தீண்டாதார் ஆலயப் பிரவேசம் அநுமதிப்பது சரியல்ல | 195 |
| எ. | ஓர் சந்தேகம் ... | 196 |
| அ. | ஸ்ரீ ராமர் எமலோகத்திலிருக்கிறார் ... | 197 |
| கூ. | விஷ்ணுபாத கங்கையின் கதி ... | ,, |
| க0. | அநுபந்தம் ... | 198 |
| கக. | சம்பந்தர் திருவிளையாடல் ... | 199 |
| கஉ. | மதிப்புரை மஞ்சரி ... | 200 |
| க௩. | தேவிகா லோத்ர ஆகமம் | (57—72) |

ஆசிரியர் ராம. த. ராம. இராமசாமி செட்டியார்,

பலவான்குடி.

# செய்தித் திரட்டு.

**உள்ளூர்:**— மாசி ௨௦வ மகா சிவராத்திரிபூஜை குமார விநாயகர் திருக்கோயிலிலும் நகரச்சிவாலயத்திலும்நான்குயாமங்களிலும்சிறப்பாகநடைபெற்றன.

குன்றக்குடி சண்முகப் பெருமானுக்கு இம்மதி ௩வ நகரத்தார் சர்க்கரைக் காவடிகள் கொண்டு செலுத்தியும் இன்று மகா ஜனங்கள் பாற்குடம் ஆகிய கொண்டு செலுத்தியும் அபிடேக ஆராதனைகள் செய்தனர். நாளை நாட்டார் சர்க்கரைக் காவடி கொண்டு செலுத்துவர்.

**குன்றக்குடி:**— ஸ்ரீ வல்லி குஞ்சரி சமேத வடிவேற் கரத்தண்ணலார்க்கு மாசி ௨௮வ காப்புக் கட்டி, திருவிழா தினமும் சிறப்பாக நடைபெறுகிறது. பக்தர்கள், பசும்பால் சர்க்கரை ஆதிய திருமஞ்சன திரவியங்களை குடங்களிலும் காவடிகளிலும் கொண்டு சேர்க்கின்றனர்; அங்கப் பிரதக்ஷணம் கும்பிடு தண்டம் ஆதிய வழிபாடு செய்கின்றனர்; முடிவாங்கல் (பிறவி மயிர் களைதல்) கரும்புத் தொட்டில் கட்டல் ஆதிய பிரார்த்தனைகள் செலுத்துகின்றனர். இன்று தெப்பத் திருவிழாவும், நாளை தேர்த் திருவிழாவும் ௭வ தழலில் இறங்கி வருபவர்களின் காவடியாதிய காவடிகளின் காட்சியும், உத்தர தீர்த்தவாரியும், மயிலாடும் பாறை மண்டபப்படியும் நடைபெறும். பெருந்திரளான அன்பர்கள் வந்து தெரிசித்து இன்புறுகின்றனர். மங்கல வாத்தியங்கள் மாறுதொலிக்கின்றன. வேதகீதங்கள் விழுமிதாய் முழங்குகின்றன. நாதப்பறையொலி நவின்று கறங்குகின்றது. அரகரமுழக்கம் ஆர்த்தெழுகின்றது. திருவீதிகளில் குளிர் நிழல் பரப்பப்பந்தர்கள் வேய்ந்துள்ளன; தண்ணீர் தெளிக்கப்பெறுகின்றது. ஆங்காங்கு அந்தணர் அடியவர் ஏழைபரதேசிகட்கு அமுதருத்தி அன்னதானங்கள், செய்யப்பெறுகின்றன; தண்ணீர் பந்தர்கள் ஐயம்பெற வைத்து உதவப் பெறுகின்றன. எல்லா வகையாலும் ஆறுமாமுகத்தண்ணலார் திருவிழா சீரும் சிறப்புமாக நிறைவேறுகிறது.

**திருத்தென்குடித்திட்டை:**— மாசி ௩வ வளர்பிறைச் சதுர்த்தசியன்று நடராஜாபிடேகம் கருணீகர், மறைத்திருவாளர், மு. பாலசுப்பிரமணி ஐயரவர்களாலும் ௭வ மாசி மக உபயம் தஞ்சை கீழவாசல் திரு. வ. பெத்தபெருமாள் பிள்ளையவர்களாலும் மாசி ௨௦வ மகாசிவராத்திரி உபயம் திருவாளர்களான:- தேவகோட்டை ராம. அரு. அரு. ராம. அருணாசலச் செட்டியாரவர்களாலும் குளமங்கலம் சாமியாப் பிள்ளை யவர்களாலும் சிறப்பாகச் செய்யப்பெற்றன.

**மகா சிவராத்திரி:**— தேவார திருவாசகமாதிய பாடல் பெற்ற சிவாலயங்களுக்கெல்லாம் தேவகோட்டை திருவாளர், ராம. அரு. அரு. ராம. அருணாசலச் செட்டியாரவர்கள் மகா சிவராத்திரிப் பண்டிலிருந்து வழக்கம் போல திரவியம் சேர்ப்பித்து திருமஞ்சன திருவாராதனைகளைச் சிறப்புறச்செய்வித்தார்கள்.

**பிரான்மலை:**— ஸ்ரீ குண்ணுவளர்ந்தாள் என்னும் பிடாரியம்மனுக்கு பூச்சொரியல் இரண்டாவதாண்டு மஹோற்சவம் இம்மதி ௩௦வ நடைபெறும்.

**காரைக்கால்:**—"காரை சைவ சித்தாந்த வித்தியாசிரம"த்தின் முதலாண்டு நிறைவிழா மாசி ௨௩—௨௭வ களில் பண்டிதமணி திருவாளர், மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தலைமையில் அரிய பெரிய விரிவுரைகளுடன் இனிது நடைபெற்றது.

———

௳

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

| ஆண்டு ௪ | பவ—பங்குனி: 1935—மார்ச் | திங்கள் ௪. |
|---|---|---|

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## இந்து மடங்கள் மசோதா.

அரசாங்க சட்டசபைகள் அரசியல் விஷயங்களைக் கண்காணித்து அரசினர்க்கும் பிரஜைகட்கும் நலந்தரும் செயல்களைப் புரிந்து வந்தன. நாளடைவில் ஜனநாயகக் கக்ஷியைச் சார்ந்த அங்கத்தினர்கள் அதிகமாயினர். ஆகவே, அங்கத்தினர்கள் நினைத்ததெல்லாம் சட்டமாக்க ஆரம்பிக்கின்றனர். சபையின் தன்மை இன்னது; தங்களின் நிலைமை இன்னது என்றுகூட அறியமாட்டாதாரும் அங்கத்தினராய்ச் சட்டசபைக்குட் புகுந்து விடுகின்றனர். அவர்கள் கொண்டுவரும் மசோதாக்கள் ஒவ்வொன்றும் வியப்பாகவே யிருக்கின்றன. கல்யாணத்தடை செய்ய, கருப்பத்தடை செய்ய, தீண்டாமை விலக்க, தேவாலயங்களில் வரையறை யின்றி யாவரும் புக, தேவாலயங்களின் உரிமையைக் கவர, மடாலயங்களின் உரிமையைக் கவர, செல்வர்களின், சொத்துரிமையைக் கவர, இன்னும்இவைபோன்ற பற்பல சட்டங்களைக் கொண்டு வருகின்றனர். இவைகள் எவ்வளவு நியாயமானவைகள் என்று அவர்கள் ஆன்ற அறிவாளிகளுடன் கூடி ஆய்ந்து தெளிந்தால் இம்மாதிரி சட்டங்களைக் கொண்டு வந்து அனர்த்தங்களைச் செய்யார்கள். சாதியாசாரம், சமயாசாரம், குடும்பவாழ்க்கையும்கூட அரசாங்க

186949

சட்ட சபைக்குள் கட்டுப்படுத்துவதுதானே இவர்கள் சட்ட சபைகளில் சுதந்தரம் பெற்றதன் பலன்? தொழிலாளிகளின் வேலையில்லாத் திண்டாட்டத்தை யொழிக்க, இளைஞர்களை ஏமாற்றுவோரைத் தடுக்க, நாதியற்றவர்களின் சொத்துரிமைகளைப் பாது காக்க, பழுவான வரிகளைக் குறைக்க பொருத்தமான திருத்தங்களைச் செய்யப் பாடுபடலாகாதா? சாதி சமயாசாரங்களிலும் குடும்ப வாழ்க்கையிலும் உள்ள சுதந்திரங்களும் பறிபட்டு மனிதர் உயிர் வாழ்வதைக் காட்டிலும் இறந்தொழிதலே சிறப்பாகும். தங்கள் சாதியாசாரங்களிலும், சமயாசாரங்களிலும், குடும்ப வாழ்க்கையிலும், தேவாலயங்களிலும் நேரும்குறைகளை முறைசெய்ய தம்இனத்தார், தங்கள் குருநாதர், தங்குலப்பெரியார், உரியார் அல்லதுஊரவர் கட்குள் நேரான முறைமையில் சீர் செய்து கொள்வதே பொருத்தமாகும். அவ்வாறின்றி அவைகளை யெல்லாம் சட்ட சபைக்குள் கட்டுப்படுத்தப் பார்ப்பது நல்லெண்ணத்தோடு கூடியதன்று. சாதி சமயாசாரங்களையும், சாஸ்திர வரம்புகளையும் கெடுக்கப் பார்ப்பதே யாகும். சட்டசபைக்குட் புகுந்தவர்கள் தாங்கள் எங்கோயிருந்து இறங்கி வந்த உத்தமர்கள் போலவும் பேரறிவாளர்கள் போலவும் கருதிக்கொண்டு மற்றவர்களை அயோக்கியர்களாக அறிவீனர்களாக நினைப்பது அடாது. நம்முன்னோர்கள் சாதி சமயாசாரங்களை யாதினும் சிறந்ததாகக் கருதி அவைகளில் அரசாங்கத்தார் தலையிடப் படாதென்று வரையறை செய்துகொண்டிருக்கிற நிலைமைக்கு மாறாகச் சட்டங்கள் கொண்டுவருவன வெல்லாம் அவர்களை இழிவு படுத்துவதாகாதா? குடும்பத்தில் பெண்டுபிள்ளை பண்டு பதார்த்தங்களில் வைத்துள்ள பந்தங்களை விடுத்து அல்லலற்று வேதாந்த சித்தாந்த விசாரணைகளைச் செய்து வீடு பேற்றை விரும்பி நிற்பதற்கேதுவாகிய மடங்கட்கும், படாதிபதிகட்கும், சிஷ்யர்கட்கும் நிர்ப்பந்தங்கள் உண்டு படுத்த சுப்பிரமணியபட் என்பார் கொண்டு வந்திருக்கும் சட்டம் யாராலும் ஒரு சிறிதும்ஒப்புந்தரத்தகன்று. பற்பல இடங்களில் பல மேதாவிகளும் கண்டனம் செய்கிறார்கள். ஆகையால் அவருக்கு எந்த மடாதிபதிகளிடத்தில் அருமையிருந்தாலும் அருமையை விடுத்து அவர்கள் பால் அணுகி அவர்கள் அனுக்கிரகத்தால் ஞான சாதனம் பெறுதலும் மசோதாவைத் திரும்பப் பெறுதலுமே சிறப்பாகும். இன்றேல் சட்ட சபையில் கிறிஸ்தவர்கள், மகமதியர்களின் சாதி சமயாசாரங்களுக்கு ஒரு நீதியும் இந்துக்களின் ஜாதி சமயாசாரங்கட்கு ஒரு நீதியுமாகச் சட்டம் செய்வது சரியல்ல வென்று இம்மசோதாவை நிராகரித்து விடுவதே நியாயமாகும்.

---



# மதிப்புரை மஞ்சரி.

**கிராதார்ச்சுனீயம்:—** வடமொழியிலுள்ள ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான இந்நூலை தமிழில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வியாஹரண மஹோபாத்தியாயர் மறைத்திருவாளர் வை. இராமசாமி சர்மா அவர்கள் எழுதி சுன்னாகம் தனலக்குமி புத்தகசாலையார் வெளியிட்டிருக்கிறார்கள்.

இலக்கியச் சுவைகள் மலிந்து சொற்செறிவு பொருட் செறிவு களுடன் நீதிகள் பலவற்றை விளக்கி வீரரசமும் பக்திரசமும் சேர்ந்து விளங்குகின்றது.

(க) அடவியிருலிந்த தருமவேந்தர்பால், வனவேடுவன் துரியோதனனின் அரசியலைப்பற்றிக் கூறிப்போக திரௌபதியும் வீமனும் தம்கருத்தறிவிக்க தருமர் தக்க நீதிகள் புகன்று கொண்டிருக்கையில் வியாச முனிவர் வருதலும்,

(உ) முனிவர்பால் மந்திரோபதேசம் பெற்று அருச்சுனன் தவத்திற்கு செல்லுதலும்,

(ங) தவத்துக்கு ஊறு செய்யப் பன்றியுருக் கொடுபோந்த மூகதானவனைக் கொன்று அருச்சுனன் தவத்தைக் காக்க, சிவபெருமான் சிவகணங்களுடன் வேடுவ வடிவங்கொண்டு வருதலும்,

(ச) பரமன் பகழிவிடுத்துப்பன்றியைமாய்க்க அப்பகழியை விரும்பி எடுக்கலுற்றவிஜயனையணுகிவேடுவத்தூதன்கெம்பீரவார்த்தை பலகூற,பார்த்தன், எதிர்மொழிபகர வேடனாய் வில்வாங்கி நின்றவிமலன் விஜயனுடன் போர் புரிந்து அருள் புரிதலும் தித்திக்கும் தெள்ளிய நடையில் விளக்கப் பெற்ற நான்கு அத்தியாயங்களையும் 94 பக்கங்களையும் உடைய இந்நூல் அரும்பதவுரையுடன் உயர்ந்த காகிதத்தில் அச்சியற்றிய சிறந்தபுத்தகம்.

**மங்கைக்கோர்மதியுரை:—** இது திருவாளர், தா. பொ. மாசிலாமணிப் பிள்ளையவர்கள்எழுதியது. பெண்கள், தம்பொறுப்பையும் கடமையையுமுணர்ந்து வாழ்க்கையைச் செவ்வனே நடாத்துவதற்கு ஏற்ற முறையில் சரீரசுகம், அழகுப்படுத்துவதெங்ஙனம்? உணவு, பானம், வாயு, நடை, சுத்தம், சரீரமலங்கள், தேகாப்பியாசம், உடை, மனப்போக்கு, உற்பத்தியின் ரகசியம், உத்தம சீவியம், என்னும் பதின்மூன்று வகைகளாக விளக்கி முப்பத்திரண்டு பக்கங்கள் உடையது. இதுவும் கிராதார்ச்சுனீயமும் "தனலக்குமி" புத்தகசாலை, சுன்னாகம் வண்ணார் பண்ணை என்ற விலாசத்திற் பெறலாம்.

**ஞானசித்தி:—** இது யாழ்ப்பாணத்திலிருந்து மாதம் இருமுறை வெளிவரும் தமிழ்ப் பத்திரிகை.

சைவம் தழைக்கத்தளரா துழைப்பது. மேலாம் சிவஞானத்தை விளக்குதலால் இப் பெயர் தாங்கியது. சைவ சமய நூல்களையும் சாத்திரங்களையும் தத்துவார்த்தங்களையும் சிறப்பாகக் கொண்ட இதன் வருட சந்தா ரூபா மூன்று. பத்திராதிபர்:— வித்வான், திரு. சி. நாகலிங்கம் பிள்ளையவர்கள் வதிரி, கரவெட்டி P. O. இலங்கைக்கு எழுதிப் பெறலாம்.

**மணிமாலை:**— இது திருநெல்வேலி வடக்குரத வீதி மணிவாசக மன்றத் தலைவர், திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை M. A; M. L. அவர்களால் உயர்ந்த தமிழ் நடையில் அரிய பெரிய ஆராய்ச்சிகளுடன் உலக சரித்திரம், உலகியல், அரசியல், அரசியல் சட்டம், தமிழ் இலக்கியம், சைவநூல், தமிழ் நூல் ஆகிய பலதிறப்பட்ட பெரும் பொருள்களை மாலைகளாகக் கோவைகளாகக் கொண்டுவரும் மாத வெளியீடு. இதன் வருட சந்தா ரூபா ஐந்து. ஆயுள் சந்தா ரூபா நூறு. பாது காப்பாளர் தொகை ரூபா ஆயிரம். இதன் ஆசிரியர் சட்டகலாசாலைப் பேராசிரியராயிருந்தவர்கள்; தமிழ் ஆங்கிலம் எனும் இருமொழிகளிலும் பெரும் புலமை மிக்கவர்கள். இவர்களின் திறமையை உலகோர் பலரும் நன்கறிவர். இவர்களைப் போன்ற தகுதியுடையவர்களை ஆசிரியராகக் கொண்டுவரும் பத்திரிகைகளே உலகோர் போற்றற் குரியதாகும். அணியணியாக மணிகள் தொடுத்தாற் போன்று உரை நடைகளுடன் கூடிய இதற்கு "மணி மாலை" என்னும் பெயர் மிகப் பொருத்தமே.

**மதுர மித்திரன்:**— இது தேசீய வாரப் பத்திரிகை திருச்சிராப்பள்ளி தெப்பக்குளம் P. O. லாலாஸ்டோர் மதுரமித்திரன் ஆபிசிலிருந்து திங்கட்கிழமை தோறும் வெளிவருவது. இதன் ஆசிரியர் திரு N. சுப்பிரமணியம் அவர்கள். தேசீயவிஷயத்தில் மிகத் தீவிரமாக வீரத்துடன்விளங்கும் இதனை பலரும் ஆதரித்துத் தேசபக்தர்களாகச் சிறப்புறலாம். வருட சந்தா ரூபா இரண்டு.

**சித்தன்:**— இது கல்வி, கைத்தொழில், வர்த்தகம், விவசாயம், வைத்தியம், சுகாதாரம் ஆகியவைகளை விளக்கும் அரிய கட்டுரைகள் தாங்கி வெளிவரும் மாதசஞ்சிகை. வருட சந்தா அணா எட்டு. C. P. சாமி என்பவர்கள் இதன் ஆசிரியர். மானேஜர், "சித்தன்" பழனி S. I. என்ற விலாசத்திற்பெறலாம்.

**தொழிலாளர் கல்வி உலகம்:**—இதன் வருட அனுபந்தம் வரப்பெற்றோம். தொழிலாளரின் கல்வி அவசியத்தை அடிப்படையாகக் கொண்டது. உலகிலுள்ள ஒவ்வொரு மனிதரும் யாதாமொரு தொழிலைச்செய்தே சீவிக்க வேண்டியவராவர். பல தொழில்களின் பாகுபாடுகளையும் சீரியமுறையில் தெளிவிக்கும் இது யாவர்க்கும் இன்றியமையாத தென்று கூறுதல் மிகையன்று. மாதம் இருமுறை வெளிவரும் இதன் ஆண்டுத் தொகை உள்ளூருக்கு அணா எட்டு. வெளியூர்கட்கு அணா பனிரண்டு. பெறுமிடம்:- மானேஜர், 15. ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு, மவுண்ட் ரோடு, சென்னை.

**கந்தரலங்காரம்:**—ஸ்ரீ அருணகிரி நாதரருளிய ஒரு நூறு செய்யுட்களும் நூற்பயனும் மிகுதியாகக் காணப்பெறும் ஆறுசெய்யுட்களும் அருணகிரிநாத சுவாமிகள் வரலாறும் சேர்த்து சென்னை, செந்தமிழ்க் கழகத்தார் வெளியிட்டுள்ளார்கள். விலை அணா ஒன்று. பாராயணத்திற்கு உரியது.

* புத்தகங்கள் பத்திரிகைகளை அன்புடன் அனுப்பியுள்ள மெய்யன்பர்கட்கு எமது மனமார்ந்த வணக்கமும் நன்றியும் உரித்தாகுக.

———

உ

# நமது கடமை.

(கண்டாச்சிபுரம் திரு. வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள்)

ஆழிவநெடுங் கடலாடை பூண்டிலகு மிவ்வுலகில், நால்வகை யோனி, எழுவகைப் பிறப்பு, எண்பத்து நான்கு லட்சம் ஜீவ பேதங்களென்கின்ற சர்வசராசர உயிர்த்தோற்றவனைகளிலேமக்கட் பிறப்பே மிக்க மேலானதாக ஆன்றோர்களால் கருதப்படுகின்றது. "அரிது அரிது மானிடராதலரிது" என்று ஔவைப்பிராட்டியாரும், "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினு மரிதரிது காண்" என்று தாயுமானவருங் கூறியிருத்தலே மானிடத்தின் மேன்மையை நன்குபுலப்படுத்துவதாகும்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்"

என்றுமணிவாசகங்கூறியபடி கீழ்ப்போனஎவ்வளவோதாழ்ந்த பிறப்புக்களிலெல்லாம் பிறந்து பிறந்திளைத்துப் பல்வகைத் துன்பமெய்திப் புண்ணிய மேலீட்டினால் "நல்லறிவு சற்றேறக" ஜென்ம ஜென்மங்கள்தோறும் செய்த நல்வினைச் சேடமிகுதியான், கிடைத்தற்கரியதும் மிக வுயரியதுமான இம்மானுடப் பிறவியை யடைந்திருக்கின்றோம்; ஸப்த, ஸ்பரிச, ரூப, ரஜ, கந்தமென்னும் ஐம்புல நுகர்ச்சியோ டமையாது ஆறுவது அறிவாகிய "பகுத்தறிவை"யும் எல்லாம் வல்ல இறைவன் நமக் களித்திருக்கின்றனர். இத்தகைய அருமை பெருமை வாய்ந்த மானிட யாக்கையைப் பெற்ற நாம், இவ்வுலகின்கண் எதற்காகப் பிறந்தோம்? இங்கு நாம் செய்ய வேண்டிய இன்றியமையாத கடமைகள் ஏதேனுமுண்டா? அப்படிக்கிருக்குமாயின், அதனை எவ்வாறு ஒழுங்குபெறச் செய்யவேண்டியது? என்பது பற்றி நாம் ஆராய்ந்தறியவேண்டியது மிகவும் அவசியம். இம்மண்ணுலகில் நாம் பிறந்ததே, ஒரு முக்கியமான கடமையைச் செய்து முடித்தற்காகு மென்பதை நாம் உணர்தல் வேண்டும்.

"மானிடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காய
மானிடத் தைந்துமாடு மரன்பணிக்காக வன்றோ"

என்ற பாசுரத்தில் மானிடர்கள் கடமையைப்பற்றிச் சிவஞான சித்தியாரின் நூலாசிரியர் யாமெல்லோரும் உணரும் வண்ணந்

தெளிவுப்படுத்திக் கூறியிருக்கின்றனர். "உன்னை யறி உன்முடி வினைச் செய்" என்னும் வேதாந்த நிபுணர்களின் வாக்கும், "அறஞ் செய விரும்பு" (அறம் - தர்மம் அல்லது கடமை) தர்மமென்று உலகம் போற்றும் உன்னுடைய கடமையை நீ தவறாது செய்ய ஆசைப்படு" என்று அறிவு புகட்டிக்கூறும் ஔவைப்பிராட்டியாரின் அமுத வாக்கும், நமதுகடமையைச்சோர்வின்றிச்செய்து முடித்தல் வேண்டு மென்பதை வற்புறுத்துகின்றன.. ஆழ்ந்த அறிவோடு ஊன்றிப் பார்க்குமிடத்து, இவ்வுலகத்தையும், இவ்வுலகப் பொருள் களையும், நம்மையுந் தம்மிடமிருந்து தந்த தலைவனுக்கு நாம் முக்கிய மாகச் செய்ய வேண்டிய கடமை யொன்றுளது என்பது நன்கு புலனாகின்றது. அஃதென்னையோ வெனின்,

"தெய்வ மொன்றுள தெனத் தேறிப்பணிவது
மானிடப் பிறப்பில் வந்தோர் கடனே"

என்று ஆமாத்தூரடிகள் சத்திய சூத்திரத்திலும்,

"தன் கடன் அடியேனை யுந்தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

என்று நமது திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்திலும் கூறியாங்கு இறைவன்பாற் பக்தி செலுத்தி முத்தியடைதலே யாம். இதனைக் குறுந்திரட்டில்,

"பெறுதற் கரிய பிறப்பி னிதன்போக்
கறிதற் கரிய வவதி—பிறிதொன்றை
நாடுதற்கு நேரமுண்டோ நன்னெஞ்சே முத்திநெறி
கூடுதற் கல்லாது குறித்து."

என்று ஒரு வெண்பாவில் ஆசிரியர் தெளிவுபடுத்திக் கூறி யிருத்தல் காண்க. இக்கருத்தை யொட்டியே நமது தமிழ் மூதாட்டி யாரும் "வீடுபெற நில்" என்று மிகச்சுருக்கமாகக் கூறியுள்ளார்கள். ஆகையால், இம்மலர்தலை யுலகில் மானிட ஜன்ம மெடுத்த நாம் ஒவ்வொருவரும், இறைவனோடிரண்டறக் கலக்கும் நிரதிசயானந்த வின்பமுத்தியாகிய மோட்சமடைய முயற்சி செய்தலே, அவசிய மாகச் செய்யவேண்டிய கடமையை யுஞற்ற அடிகோலியதாகும். அதாவது நமது ஜீவான்மாவை பரமான்மாவுடன் கலக்கச் செய்து ஐக்கியமுறலே நமது கடமையாம்.

இனி முத்தியடைதற்குரியவழிகள்:—சரியை, கிரியை, யோக, ஞானம் என்பதாகப் பல விருப்பினும் "அவனருளே கண்ணாகக் காணினல்லால்" என்றபடி எல்லாம் வல்ல இறைவன் திருவருள் கைகூடினன்றி எளிதில் நாம் முத்தியை யடையவியலாது. "அவ னன்றி யோரணுவு மசையாது" என்பது ஆன்றோரறவுரை. "அவ னருளாலே யவன்றாள் வணங்கி" என்று மணிவாசகருங் கூறியிருக் கின்றார். ஆகையால் அம்முழுமுதற் கடவுளின் பரிபூரண கிருபை



யாலன்றி, மோட்சமென்னு முத்தியங் கரை யடைதல் முடியாவாம். அருள் வித்திட்டு அன்பு நீர்பாய்ச்சு வார்க்கே மோட்சமாம் பயிர் முதிர்ந்து விளைந்து பயன்றருவதாகும். "மெய்யருளாந் தாயுடன் சென்றுபின் றாதையைக் கூடி" என்று பெரியோர் கூறியிருப்பது இக்கருத்துப்பற்றியே யாமென்க.

"உறவுகோல் நட்டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே"

என்றபடி திரிகரண சுத்தியோடு அன்பு செறிந்த உளத்தராய் பக்திபுரியு மெய்யன்பர்களுக்கே அவனருள் வெளிப்பட்டு முத்தி சித்திக்கும். "முத்திக்கு வித்து பக்தியே" என்பது மூதறிவாளர் களின் முடிபு. எனவே இறைவன்பாற் சதாபக்தி செலுத்தலே முத்தியடைதற் குரிய வழியாகும் என்பது பெற்றாம். "பக்தியே நம்மைப் பரகதி யுய்விக்கும் பாதை" என்று பல பல மஹான்களும் ஆச்சார்யர்களுங்கூறியிருக்கின்றனர். "பக்தியால்முத்திசித்திக்கும்" என்பது நமது நாட்டின் பண்டைப் பழமொழி. கண்ணப்பர், வரகுணர், சிறுத்தொண்டர் முதலிய நமது நாட்டுப்பெரியார்களும், சமய, சந்தான, குரவர்களும் அன்பின் பக்திசெய்தே, இன்பமுத்தி யடைந்தார்கள் என்பதை நாம் புராணவாயிலாய் நன்கறிகின்றோம். "பக்தி வலையிற் படுவோன் காண்க" என்று நமது திராவிடவேதம் முழங்குகின்றது. அன்போடியைந்த பக்தியொன்றினுக்கே பெரு மான் வயப்படுகின்றாராதலின், நாமெல்லோரும் அவன்பாற் பக்தி செலுத்தி, பிறவிப்பெரும் பிணியை வேரோடுங்களைந்து, முத்தி யடைவான் முயற்சி செய்தல்வேண்டும். இதுவே முக்கியமாய்ச் செய்ய வேண்டிய நமது கடமையா மென்க.

"வாழ்த்த வாயும் நினைக்கமட நெஞ்சுந்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினையே னெடுங் காலமே"

என்று திருநாவுக்கரசு சுவாமிகள் தான் சமண் முதலிய புறச் சமயம்புக்கு வீணிலே நெடுங்காலம் போக்கினது பற்றி மிகவும் வருந்துகின்றனர்.

"அன்போ டுருகியகங் குழைவார்க் கன்றி
யென்பொன் மணியினை யெய்த வொண்ணாதே"

என்று திருமூல யோகிகள் திருமந்திரத்திற் கூறுகின்றனர். ஆகையின் மானிட யாக்கையிற் றோன்று மாண்பினீர்! ஊனெடுத்த வுடம்பின் பிறவி, தானெடுத்த வுறுதியைச் சாரும் வண்ணம் நாம் எல்லாம் வல்ல இறைவனடிக்கன்பு பூண்டுபக்தி நெறியொழுகி முத்தியடையுமாறு நன்முயற்சியி லீடுபடுவோமாக! இதற்கு நம் கண்ணுதற் பெருமான் திருவருள்துணை புரிவதாக!

# இலங்கை நகரத்தார்சங்கம், கொழும்பு.

---

## கூட்டுக் கமிட்டி அறிக்கையைப் பற்றிக் கண்டனம்.

இந்நகர் செட்டியார் தெரு இலங்கை நகரத்தார் சங்கத்தின் ஆதரவில் 7-1-1935 திங்கட்கிழமை மாலை 6-மணிக்கு சங்கத்தின் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. திரு ராம. அரு அரு. ராம. சுவாமிநாதன்செட்டியார் தலைமை வகித்தார்கள்.

பர்மாவிலுள்ள நகரத்தார்கள் 80 கோடி ரூபாய்களுக்கு மேல் அங்குமுதலிட்டிருக்கின்றார்கள்; பர்மியப் பொருளாதார முன்னேற்றத்திற்கு அவர்கள் செய்திருக்கும் ஊழியம் சாதாரணமானதல்லவென்று சங்கத்தலைவர் திரு. செ. சி. நா. கண. கந்தசாமிசெட்டியார் விவரமாக குறிப்பிட்டு, கூட்டுக்கமிட்டி யறிக்கையின் 473-வது பாராவில் கூறப்பட்டுள்ள விஷயம் பர்மாவிலுள்ள நகரத்தார்களின் தொழில் முறைக்குப் பெரிதும் பாதகமாக விருப்பதால் அதைக் கண்டனம்செய்து கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றி இத்தீர்மானத்தை மேன்மை மிக்க இந்திய வைசிராய்; சென்னை கவர்னர்; பர்மா கவர்னர்; இந்தியா மந்திரி இந்நால்வருக்கும் தந்தி வழியாக அனுப்பி வைக்கப்படவேண்டுமெனப் பிரேரபித்தார்.

### தீர்மானம்:—

நகரத்தார்கள் சம்பந்தமாகக் கூட்டுக்கமிட்டி யறிக்கையின் 473-வது பாராவில் அவதூறாகக் காணப்படும் விஷயங்களை இலங்கை நகரத்தார் சங்கம் பலமாகக் கண்டனம் செய்வதுடன் பர்மாவில் நகரத்தார்களுக்கு விசேஷ பொறுப்புகள் உள்ளன என்பதையும், அவர்களுடைய முதலும் ஊழியமுமே பர்மாவின் விவசாய முன்னேற்றத்திற்கும், நிலவரி அதிகரிப்பிற்கும் முக்கிய காரணம் என்பதையும் சர்க்கார் அங்கீகரிக்க வேண்டுமென வற்புறுத்துகின்றது. மேலும் இந்தியர்கள் பர்மாவிற்கு சுயேச்சையாகச் செல்வதைத் தடுக்கவும் பர்மாவில் இந்தியர்களுடைய உரிமைகளைக் குறைக்கவும் கூட்டுக்கமிட்டி அறிக்கையில் கூறப்பட்டுள்ள சிபார்சை இச்சங்கம் பலமாகக்கண்டனம் செய்கின்றது. 1934 டிசம்பர் 14-ந் தேதி கூடிய பர்மா நகரத்தார் மகாநாட்டு நடவடிக்கைகளையும், கோவிலூர், காரைக்குடி முதலான விடங்களிலும், இந்தியாவில் இதர இடங்களிலும் கூடிய நகரத்தார்களின் மகாநாட்டுத் தீர்மானங்களையும் இச்சங்கம் ஆமோதிக்கின்றது.

திரு. உ. அ, பெரி. மு. அரு. அடைக்கப்ப செட்டியார் இத்தீர்மானத்தை ஆமோதித்தார். பின்னர் ஏகமனதாய்த் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனவே சங்கக் காரியதரிசி அறிவிக்கின்றார்.

---



## கூட்டுக் கமிட்டி அறிக்கையைக்குறித்து விண்ணப்பம்.

பர்மா இந்திய தூதுகோஷ்டிக்குத் தலைவராகிய கனம் செட்டிநாடு ராஜா சர். அண்ணாமலை செட்டியாரவர்கள், மேன்மைமிக்க இந்தியா மந்திரி, சென்னைக்கவர்னர், பர்மாகவர்னர் ஆகியவர்கட்கு விண்ணப்பங்கள் செய்து கொண்டபடி மேன்மைமிக்க ராஜப்பிரதிநிதியவர்களிடம் (24—1—1935) சமர்பித்த விண்ணப்பத்தின் சாரம்:—

மேன்மை தங்கிய இராஜப் பிரதிநிதியவர்களே! பர்மாவில் செட்டியார்கள் நிலைமையைப் பற்றிப் பணிவுடன் விண்ணப்பித்துக் கொள்கிறோம்.

எங்கள் சமூகத்தினர் எல்லோரும் பாங்கர்களே. செட்டியார்களாகிய நாங்கள் நூற்றாண்டுகளாக பர்மாவில் பாங்கிங் தொழில் செய்து வருகிறோம். இதுபோது பர்மாவில் போட்டிருக்கும் மூலதனம் ரூபா எண்பது கோடி யாகும். பர்மா பாங்கிங் விசாரணைக் கமிட்டியாரின் ரிப்போர்ட்டினால் இது உறுதி செய்யப்பெற்றுளது.

பர்மா இன்றுள்ள நல்ல நிலைமைக்கு நாங்கள் பெரிதும் உதவியிருக்கிறோம். எங்கள் மூலதனமே பர்மிய காட்டு நிலங்களைச் சாகுபடி நிலங்களாக்கியது; உள்நாட்டு வியாபாரத்தை விருத்தி செய்தது. அந்நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று விவசாயம் வியாபாரம், கைத்தொழில்களுக்குப் பணவுதவிபுரிந்திருக்கிறோம். பர்மாவில் ஐரோப்பிய பாங்குகள் பெரும்பாகம் ரெங்கோனிலேயே இருக்கின்றன. அவைகள் தங்கள் ஆட்சியை நகர்ப்புறங்களில் செய்யவில்லை. செட்டியார்களை இந்தப் பாங்குகளின் ஏஜண்டுகளாகவும் ஒருவாறு ஒப்பிடலாம்.

நாங்கள் பரம்பரையாக பாங்கிங் தொழில் நடத்திவருகிறோம். பாங்கர்கள் சாதாரணமாக இலகுவில் செலாவணியாகும் பணத்தை நிலங்களாகமாற்ற நிர்ப்பந்தம்நேர்ந்தாலல்லது விரும்பார்களென்பது மேன்மை பொருந்திய தாங்கள் அறிந்த காரியம். ஆனால் நாங்கள் கொடுக்கல் வாங்கல் செய்யும்பொழுது கடனுக்குத் தக்க ஈடுகள் பெறவேண்டியதிருக்கிறது; பொருள் மந்தத்தில் பணத்தைத்திரும்பப் பெறுவது அசாத்தியமாகிறபோது பணத்திற்குபதிலாக தருபவைகளை ஏற்றுக்கொள்ள நேருகிறது. அதனால் பர்மாவில் இன்று விருப்பமில்லாத நிலவுரிமை யுடையவர்களாக விருக்கிறோம். நிலங்களை ஒப்புக்கொண்டதற்கு நாங்கள் கொடுத்த தகுந்த விலை கிடைத்தாலும் அதில் ஒரு பகுதியை இழந்தாலும் நிலங்களை விற்றுவிடச் சித்தமாயிருக்கிறோம், இதுவே எங்களின் நிலைமை.

ஆனால் கூட்டுக் கமிட்டிப் பார்லிமெண்டரி செலக்ட் கமிட்டியார், செட்டியார்கள் நிலங்களைச் சேர்த்து வைத்துக் கொள்ளக்

கவலையுடனிருப்பதாகப் பொருள்படும்படி குறிப்பிடுகிறார்கள். கமிட்டியாரின் முடிவானது உண்மைக்கு மாறாக இருப்பதை மேன்மை தங்கிய தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம். கமிட்டியார்களுக்கு எங்களைப்பற்றி எல்லா விவரங்களும் ஆதாரங்களும் கிடைத்திருந்தால் அவர்கள் இம்மாதிரியாகக் குறிப்பிட்டிருக்க மாட்டார்களென உறுதிகூறமுடியும். மேலும் பர்மா கவர்னர்களும் கவர்ன்மெண்டின் இதரஉத்தியோகஸ்தர்களும், நாங்கள் பர்மாவின் வியவசாய வியாபார அபிவிருத்திக்கு உதவியுள்ளவைகளைப் பற்றிக் கூறியிருப்பனபோலவே கமிட்டியார்களும் புகழ்ந்து கூறியிருப்பார்களென்பது நிச்சயம்.

பர்மாவில் செட்டியார் பாங்கர்கள் பரம்பரையாக வசித்து பர்மிய வாடிக்கைக்காரர்களுடன் உறவு கொண்டு நேசப் பான்மையைப் பெருக்கி வருகிறார்கள்; பெரும்பாகமான காடு மேடுகளை விளை நிலமாகச் செய்யப்பெற்றதற்குச் செட்டியார்களே காரணராவர்; அவர்கள் கடன்காரரிடம் அன்பும் தயாளமும் உடையவர்களாக இருந்துவருகிறார்கள்; தங்களுடைய சக்திக்கு மீறிய சந்தர்ப்பங்களால் தற்பொழுது விருப்பமில்லாத நிலைமையில் நிலச்சுவான்தார்களாயினர்; ஆயினும் சிறிது நஷ்டமேற்பட்டாலும் நிலங்களை விற்றுவிடச் சம்மதமுடையவர்களாயிருக்கின்றார்கள்; இன்றும் வியவசாயம் நடைபெறச் செட்டியார்கள் பணம் உதவி செய்கின்றார்கள்; அவர்கள் உதவியின்றிச் சாகுபடி செய்ய இயலாது. என, பொறுப்பு வாய்ந்த பல உத்தியோகஸ்தர்களால் ஒப்புக்கொள்ளப் பெற்றுள்ளன.

நிலவரிமூலமாகவும் வருமானவரி மூலமாகவும் நாங்கள் பர்மாவின் பொதுவருமானத்திற்கு வருஷவாரி ஒருகோடி ரூபாவரை செலுத்திவருகிறோம். இந்தக் கணக்குச் சரியானதா என்பது திட்டமாய்த் தெரியவில்லையானாலும் சுமாராக ஒரு கோடியிருக்கலாம் என்பது நிச்சயம்.

### மேன்மை தங்கிய இராஜப் பிரதிநிதியவர்களே!

பர்மாவில் செட்டியார்கள் போட்டுள்ள மூலதனத்துடன் அவர்கள் கடன் வாங்கிக் கொடுத்தவைகளும் சேர்ந்திருக்கிறது. பர்மியர்களிடமிருந்து செட்டியார்களுக்கு வரவேண்டியபணத்தைப் பொறுத்தே செட்டியார்கள் தாங்கள் வாங்கிய கடன்களைக் கடன்காரர்களுக்குத் திரும்பக்கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். பர்மாவிலுள்ள எங்கள் நிலைமை இவ்வாறாகும். எங்களுக்குச் சேர வேண்டிய பணங்களை வரப்பற்றுவதிலும் நிலங்களையும் வேறு சொத்துக்களையும் கொள்ளுவதிலும் விற்பதிலும், நிர்ப்பந்தங்கள் ஏற்படும்படி பக்ஷபாதமான சட்டங்கள் செய்தால், எங்களுக்கு



இடரையுண்டாக்கும். பக்ஷபாதப்படுத்துவதும் நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்துவதும் எங்கள் சமூகத்தாரையே யழிப்பதாக விருக்கும்.

பர்மா இதுவரை இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்தது; எங்களின் சொத்துரிமைகள் பாதுகாக்கப்படும் என்ற உறுதியாலும் நாங்கள் பாது காப்புடன் அனுபவித்து வந்ததாலுமே, பெரும் மூலதனத்தைப் பர்மாவில் போட்டுத் தொழில் செய்தோம்; பர்மாவில் எங்களுடைய தொழிலுக்கு ஏதேனும் ஆனியேற்படுமென்றெண்ணவில்லை; நிர்ப்பந்தங்களுண்டாகலாமென்று நாங்கள் கனவிலும் கருதியதில்லை; பர்மாவில் எங்கள் நலன்களுக்குத் தேவையான சகல பாதுகாப்புகளும் அளிக்கும்படி மேன்மை தங்கிய தங்கள் கவர்ன்மெண்டை வேண்டிக் கொள்கிறோம்.

இராஜப்பிரதிநிதியவர்களே! நாங்கள் இராஜவிசுவாசிகள் என்பது பிரசித்தி. பர்மிய சபையில் எங்கள் பிரதிநிதித்துவத்தைப் பற்றி சில கூற விரும்புகிறோம். தற்பொழுது பர்மா சட்டசபையில் எங்கட்கு ஒரு ஸ்தானம் இருந்து வருகிறது. ஆனால் அது நியமனத்தின் மூலம் கிடைக்கப் பெறுகிறது. சட்ட பூர்வகமாக எங்கட்கு ஒரு ஸ்தானம் அளிக்க உறுதியாக வேண்டுமென்பதே எங்கள் விருப்பம் எங்கள் சமூகத்தார்களுக்குக் கஷ்டம் நேராமல் போக்க எங்கள் சமூகத்து ளொருவர் சட்ட சபையில் பிரதிநிதித்துவம் பெறவேண்டியது நியாயமான வுரிமையாகும் என்பதை மிகைப்படக் கூறவேண்டுவதில்லை. எங்களின் நலவுரிமைகளை முன்னிட்டு சென்னை சட்டசபையில் ஒரு ஸ்தானம் அளிக்கப்பெற்றிருப்பதை இந்தச் சமயத்தில் குறிப்பிட விருப்பம். இதை யுத்தேசித்து எங்களுக்கு இதர வர்த்தக ஸ்தாபனங்களான சென்னை வர்த்தக சங்கம் இந்திய வர்த்தக சங்கம், டிரேட் அசோசியேஷன் முதலியவைகளுடன் சேர்த்துப் பிரதிநித்துவம் அளிக்கப்பெற்றிருக்கிறது.

### பர்மாவில் செட்டியார்கள் உதவி.

பர்மாவில் செட்டியார்கள் உதவியைப் பாராட்டி பிரதம உத்தியோகஸ்தர்களும் கமிஷனர்களும் கூறியுள்ள தஸ்தாவேஜுகளிலிருந்து இவைமேற்கோளாக எடுத்து எழுதப்பட்டிருக்கின்றன. செட்டியார்களினுடைய உதவிகள் பர்மா சரித்திரத்தில் என்றும் நிலைத்து நிற்கக்கூடியவைகள். இவைகள்மூலம் செட்டியார்கள் பர்மியர்களுக்கு அளித்துள்ள உதவிகள் கவர்ன்மெண்டு அங்கீகாரம் பெற்றதாகிவிட்டன.

### பாங்கிங் கமிட்டி சாட்சியம்.

பர்மாமாகாண பாங்கிங் விசாரணைக் கமிட்டி சேர்மன் மிஸ்டர் கிராந்தம் அவர்களும், மிஸ்டர் டாசன் அவர்களும் தங்கள் ரிப்

போர்ட்டில் (வால்யூம் 1-பக்கம் 200) கீழ்வருமாறு கூறியிருக்கிறார்கள்:—

"செட்டியார்கள் கைகளில் நிலங்கள் தற்பொழுது அதிகரித்துள்ளன. இது நெல் தான்ய விவசாயத்தில் ஏற்பட்ட மந்தத்தின் எதிரொலியாகும். இந்த நிலைமை, மந்த நிலைமை யொழிந்ததும் நீங்கிவிடும். செட்டியார்கள் பாங்கிங் மனப்பான்மை மாறி நிலச் சுவான்தார்களாக ஆசைப்படவில்லை"

பர்மா விவசாய முன்னேற்றத்திற்கு இந்திய பாங்கர்கள் எவ்வளவு பொறுப்பாளிகள் என்ற விஷயமாக பர்மா பாங்கிங் விசாரணைக்கமிட்டி ரிப்போர்ட் (வால்யூம் 1. பக்கம் 190) வருமாறு:-

"இந்த மாகாணத்தில் விவசாயப்பொருளுதவிக்குச்செட்டியார்களே பிரதம உதவியாளர்கள். பெரும்பாலும் அவர்களே நேர்முகமாக விவசாயிகளுக்கு கடன் கொடுப்பதோடு, அம்மாதிரி கடன் கொடுத்துவரும் இதரர்களுக்கும் பணம்கடன் கொடுத்துதவிவருகிறார்கள். ஏற்கனவே பர்மாவின் அபிவிருத்தியில் அவர்கள் ஊழியம் செய்திருப்பதோடு மற்றெந்த வகுப்பாரும் முன்வராத துறையில் கடன்கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய உதவியில்லாவிட்டால் நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரங்கள் முறிந்து விடும். மேலும் நெல் சாகுபடி செய்ய முடியாமற் போனாலும் போய்விடும். இவர்கள் போன்ற பாங்கிங் முறை ஏற்படவேண்டும். ஆனால் அதற்கான முயற்சிகள் எதுவும் செய்யப்படவில்லை"

## மாஜி கவர்னர் பாராட்டு.

பர்மாவின் மாஜி கவர்னர், சர் ஆர்கோர்ட்பட்லர் (வால்யூம் 3 பக்கம் 760) வருமாறு:—

"சென்ற 25, 30 வருஷங்களில் பர்மா அடைந்திருக்கும் ஆச்சர்யகரமான முன்னேற்றத்தை செட்டியார்களுடைய உதவி இல்லாமல் ஒருகாலும் அடையமுடியாது. மாகாண முழுவதும் ஒவ்வொரு கிராமத்திலும் விவசாயிகளுக்கு செட்டியார்கள் கடன் கொடுத்து வருகிறார்கள். பர்மியர்களை அதிக தானிய உற்பத்தி செய்ய உதவி செய்வதோடு முதல் வட்டித் தொகைகளை தவணை தவராமல் கொடுக்கும்படி செய்து செட்டு, சிக்கனம் ஆகிய நல்ல பர்மியர்களிடம் பதியும்படி செய்திருக்கிறார்கள். இன்றைய பர்மியர்கள் 25-வருஷங்களுக்கு முன்புவிட இப்பொழுது பணக்காரர்களாகஇருக்கிறார்கள். இதற்குச்செட்டியார்கள்பெரிதும்வந்தனமளிக்கப்படவேண்டியவர்கள் செட்டியார்களை நன்றாக அறிந்தவர்களும் அவர்களுடன்தொழிலில்தினசரிகலந்துகொள்ளுகிறவர்களும்அவர்களுடைய மேன்மையான நேர்மையைப் பற்றியும் பாராட்டி என்னிடம் கூறியிருக்கிறார்கள். சனவான்களே, அவர்கள் பர்மா



மாகாண முழுவதும் ஒருசிறந்த பாங்கிங் முறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தமாதிரி ஒரு முறை ஏற்படுத்து வதிலுள்ள சிரமத்தை விஷயம் அறிந்த சிலரே தெரிந்து கொள்ளக்கூடும். பர்மாவின் எதிர்காலத்தில் எந்தமுறையான பாங்கிங் ஏற்பட்டாலும் செட்டியார்கள் எப்பொழுதும் தங்கள் தொழிலைச் செய்து வருவார்கள் என்று நான் மனப்பூர்வமாக உணர்கிறேன். இந்த மாகாணத்தின் முதுகெலும்பே போன்ற அவர்களுடைய பாங்கிங் முறை சென்ற வருஷங்களில் உபயோக முள்ளதாக விருந்து வந்தது போலவே இனியும் இருந்து வருமென்று நான் நம்புகிறேன்".

## குடிசைக் கைத்தொழிலுக்கு உதவி.

குடிசைக் கைத்தொழில்களுக்கு செட்டியார்களே சிறந்த முறையில் பணம் உதவி அளித்து வருகிறார்களென சென்ட்ரல் பாங்கிங் விசாரணைக் கமிட்டியார் மாகாண பாங்கிங் விசாரணைக் கமிட்டியாரின் ரிப்போர்ட்டை உறுதி செய்திருக்கிறார்கள்.

ஐக்கிய மலாயா கவர்மெண்டாரால் விவசாயத்திற்கு கவர்ன்மெண்டார் கடன் கொடுக்கும் முறை முறிந்து போனமை சம்பந்தமாக விசாரிக்க நியமித்த கமிட்டியார் குறிப்பிட்டுள்ள வைகள் பர்மாவிலுள்ள நிலைமையை உறுதிப்படுத்தும் சக்தியுள்ளதாக விருக்கிறது.

## செட்டியார்கள் பேர்போனவர்கள்.

"இந்த சமுகத்தார் ஏராளமான மூலதன முடையவர்கள். அவர்கள் முக்கியமாக கடன் வாங்கி கடன் கொடுத்து வருகிறார்கள். அவர்கள் பழகுவதற்குநேர்த்தியான தன்மை யுள்ளவர்கள். ஐரோப்பியர்களையும், ஆசிரியர்களையும்விட அவர்கள் நல்லபேர் பெற்றிருக்கிறார்கள். கடன் காரர்களிடம் அன்புடன் நடந்து கொள்கிறார்கள். நம்பத் தகுந்தவர்கள் என்று அவர்களுக்குத் தெரியும் மலாய்க்காரர்களுக்கு ஸெக்யூரிட்டி எதுவும் இல்லாமல் ப்ரோநோட்டின்மீது இவர்கள் கடன் கொடுக்கிறார்கள். பல நூற்றாண்டு களாக பாங்கர்களாக விருப்பதால் அவர்களுக்கு தொழில் முறை நன்றாகத் தெரிந்திருக்கிறது. கவர்ன் மெண்டார் பண்டுகள் எதுவும் அவர்களுடைய தொழிலுடன் முற்றிலும் போட்டி போட முடியாது. அவர்களும் அவர்களுடைய ஏஜண்டுகளும் கடன் காரர்களுடைய மத்தியிலேயே வசித்து வருவதால் ஒவ்வொருவரினுடைய தொழில் நிலைமையையும் அறியக்கூடியவர்களாக விருக்கிறார்கள். அவர்கள் சிறந்தலேவாதேவித்தொழிற்காரர்கள். ஒரு கவர்ன்மெண்டு டிபார்ட்மெண்டு அல்ல. அவர்கள் பரம்பரை உத்தியோகமாக அவர்களுடைய தொழிலை அறிவார்கள்".

### பர்மா சட்டசபை பினான்ஷியல் கமிஷனர் பாராட்டு.

*பர்மா கவர்ன்மெண்டு பினான்ஷியல் கமிஷனர் மிஸ்டர் டன், பர்மா சட்டசபையில் 1932-ம் ஹு பிப்பிரவரிமீ 16-ந் தேதி பேசுகையில் கூறியதாவது:—*

*"முதன் முதலாக சட்டசபையின் எதிர்க்கக்ஷிமூன்று அங்கத்தினர்கள், செட்டியார்கள், கடன்காரர்களை நெருக்குவதாகவும், கொடூரமாக நடந்துகொள்வதாகவும் குறிப்பிட்டுப் பேசினார்கள். இந்த மாதிரியான அபிப்பிராயங்கள், திரு. பிள்ளை அவர்களைப் போன்ற இந்தியர்களாலும், நியாயத்துக்குக் கட்டுப்படும் பர்மியர்களாலும், உண்மையை உத்தேசித்தும், நாட்டின் நன்மையைக் கருதியும் கண்டிக்கப்பட வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. நான் பல வருடங்கள் அதாவது, 1911-ம் வருஷம் முதலாக 20-வருஷ காலம் இந்த நாட்டின் விவசாயம், இதர கடன்கள் சம்பந்தமாக ஈடுபட்டிருக்கிறேன். இந்த நாட்டில் கடன் உதவி இதர நாடுகளின் கடன் உதவிமுறைகள் சம்பந்தமாகவும் விசேஷமாகப் படித்திருக்கிறேன். இந்த நாட்டில் கடன் உதவி ஏற்பாட்டுச் சரித்திரத்துக்கு செட்டியார்கள் பெரிதும் கௌரவிக்கப்படவேண்டியவர்களென்று பக்ஷபாதமில்லாத எவருக்கும் உறுதியாகச் சொல்ல முடியும். இந்நாடு செட்டியார்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது".*

### கமிஷனர் பாராட்டு.

*"சில அங்கத்தினர்கள் இன்று சபையில்பேசியதுபோல தேசபக்தியுள்ள எந்த பர்மியரும் செட்டியார்களைப் பற்றி குறிப்பிட மாட்டார்கள். இம்மாதிரி யெல்லாம் பேசுவது செட்டியார்கள் பர்மாவில் செய்துள்ள ஊழியத்திற்கு நன்றி பாராட்ட மறுப்பதாகும். அவர்கள் சென்னைமாகாணத்திலிருந்து பணத்தைக்கொண்டு வந்து போட்டு வருவதோடு விவசாயத்திலும் பணத்தைப் போட்டிருக்கிறார்கள். அவர்கள் அதை வெற்றிகரமாகவே செய்துமுடித்திருக்கிறார்கள். அவர்கள் பணத்தைக் கொண்டுவந்ததோடல்லாமல் நல்ல தொழில் முறைகளையும் கொண்டுவந்து பழைய லேவாதேவித் தொழில் முறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதனாலேயே மேல் பர்மாவைச்சேர்ந்த பர்மியர்கள் கீழ்பர்மாவை இன்றைய நிலைமைக்கு கொண்டுவர முடிந்தது. யோசனையில்லாது பேசுபவர்களைத் தவிர மற்றவர்களிடம் செட்டியார்கள் ஒருபொழுதும் நல்ல பெயரை இழந்தது கிடையாது".*



### நீதிபதிகள் கூறுவதென்ன?

*"அநுபோகம் வாய்ந்த நீதிபதிகளை செட்டியார்கள் மோசக்காரர்களா என்று கேட்டால் செட்டியார்கள் ஏமாற்றுவதே கிடையாதென்று அவர்கள் சொல்லுவார்கள். அவர்களுடைய தொழில் முறை முன் ஜாக்கிரதையுடன் கூடியதாக விருக்கிறது. அவர்கள் சிறந்த முறையில் கணக்குகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பார்த்து பல பர்மியரும் லேவாதேவி செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். செட்டியார்களைப்பற்றி உண்மை தெரிந்து கொள்ளவேண்டியவர்கள் பர்மா மாகாண பாங்கிங் விசாரணைக் கமிட்டிரிப்போர்ட்டை வாசிக்கவேண்டும். மேற்படி ரிப்போர்ட்டில் செட்டியார்களைப் பற்றியும் அவர்களுடைய தொழில்களைப்பற்றியும் பக்ஷபாதமில்லாததும், பூர்ணமானதுமான விருத்தாந்தங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இந்த மாகாணத்துக்கு பெரிய உபகாரிகளான செட்டியார்களைப்பற்றி அவதூறாக இந்தசபையில் இனிஒருபோதும் பேசப்பட மாட்டாதென்று நான் நம்புகிறேன்".*

---

## தீண்டாதார் ஆலயப்பிரவேசம் அநுமதிப்பதுசரியல்ல.

*சுவதந்திர மன்னராகிய நேர்பாளம் மகாராசாவை, கொல்லங்குடி ராஜா ஸேர் வாசுதேவராசா சந்தித்து, தீண்டாதாரை ஆலயங்களுட் பிரவேசிக்கவிடும் விஷயத்தைப்பற்றி அபிப்பிராயங் கேட்ட போது நேர்பாள மகாராசா பின்வருமாறு விடையிறுத்தனராம்: "இந்தியாவிலுள்ள ஜகநாதம், இராமேசுவரம், காசிக்ஷேத்திரம், துவாரகா க்ஷேத்திரம் முதலிய இவை போன்ற புராதனமான விசேஷ தலங்கள் புநிதமாக வைக்கப்படல் வேண்டுமேயொழிய அவற்றுள் தீண்டாதார் பிரவேசிக்க விடவொண்ணாது. நமது நாடாகிய நேர்பாளம் போன்ற தூரித்த நாடுகளில் வசிப்பவர்கள் அப்புராதன தலங்களை யெல்லாம் பரிசுத்த முடையனவாகவே மதித்து யாத்திரை செய்கிறார்கள். அப்படியான புராதன தலங்களைப் பழைய முறைப்படியும் கட்டுப்பாடுகளின் படியும் நடத்தாவிட்டால் நான் அத்தலங்களுக்கு யாத்திரை செய்ய நினைக்கவும்மாட்டேன்"*

*நேர்பாளத்து அரசரும் அவருடைய பிரசைகளுட் பெரும்பாலாரும் சிவசமயத்தவர்கள். அங்குள்ள பிரதான மான புராதன சிவஸ்தலம் பசுபதிகோயில் எனப்படும். (இந்துசாதனம்)*

---

உ

# ஓர் சந்தேகம்.

(ஆலங்குடி, திருமணமங்கலம், பெருநிலக்கிழவர்,
திரு. கல்யாணசுந்தர உடையார்.)

கல்வி யறிவொழுக்கங்களான் மிக்க பெரியோர்களே! வேத சிவாகம விற்பன்னர்களே! கீழே கண்ட விவரப்படிக்குள்ள ஐயப்பாடுகளைத் தயவு செய்து உலகம் நன்னிலைக்கண் நிற்றற் பொருட்டும், சில திருக் கோயில்களில் தெரிந்தோ தெரியாமலோ செய்யப் பெறும் சிவாபராதங்களை நன்கு தெரிந்து அக் குற்றங்களை இனி மேலாவது நீக்கி நடத்தற் பொருட்டும், என் போன்ற குறைமதி யுடையாரும் நன்கு தெரிந்துகொள்ளுதற் பொருட்டும், வேதசிவாகமங்கட்கும் பிரபல சுருதிப் பிரமாணங்கட்கும் முரணுதவாறு நடுவு நிலை கோணாமல் இச்சிவநேசன் பத்திரிகை மூலமாகவே வெளியிட வேண்டுமென மிக மிக மன்றாடி வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன். வருமாறு:—

திருக்கோயிலில் இன்னின்னசாதியார் நுழைவது கூடாதென்பதற்குத் தக்க பிரமாணங்களுண்டா? அவை வேதாகமங்களில் கூறப்பெறுகின்றனவா? அல்லது அவைகளின் வழித்தாகவுள்ள பிரபல சுருதிகளாகிய வடமொழி தமிழ்மொழி யாதிய நூல்களில் கூறப்பெறுகின்றனவா? நித்திய சூதகர்களாவார் யாவர்? அவர்களை எக்காரணங்களால் நித்திய சூதகரெனப் பெரியோர் கொண்டுள்ளார்? வாணியர்கள் முதலாயினோரை நித்திய சூதகரெனவும், அவர்கள் கோயிலுக்குள் நுழைவதுங் கூடாதெனவும் வேதாரணியம் போன்ற சில சைவாதிக்க முடையவர்கள் ஆளுகைக்குட்பட்ட தேவஸ்தானங்களில் பிரசித்தமாக வெளியில் அறிவிப்புச் செய்திருப்பது சரியான காரியமாகுமா? அவர்கள் அவ்வாறு அறிவித்திருப்பது போல வேறு எந்தப் பெரிய தேவஸ்தானங்களிலேனும் அறிவித்திருக்கிறார்களா? தென்னாட்டில் அதாவது மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களிலுள்ள தேவஸ்தானங்களில் எவ்வெச் சாதியார் கோயில்களில் நுழையக் கூடாதென வரையறை செய்திருக்கின்றனர்; அவ்வாறு அநுபவத்தில் நிறைவேறுகின்றனவா? ஈழநாட்டிலுள்ள திருக்கோயில்களிலும், கொங்குநாடு, மலைநாடு முதலிய விடங்களிலுள்ள கோயில்களிலும் மேற்கண்ட நித்திய சூதகர் எனப்படுவார் விலக்கப்பட்டிருக்கின்றனரா? என்பன போன்ற ஐயப்பாடுகளைத் தயவு செய்து விளக்கியருளுமாறு வேண்டுகின்றேன்.



உதாரணமாக திருவிரும்பூளை என்னும் ஆலங்குடிக் கோயிலில் (தேவகோட்டை பழ. செ. லெ. பழ. மானேஜிங் டிரஸ்டி) கருப்பக்கிரகம் நீங்கலாக மற்றுள்ள அர்த்தமண்டபம் முதலான இடங்களில் திருவிளக்கிடுவதற்கும், திருப்பூங்குடலை யெடுத்தல் முதலிய பணிவிடைகளைச் செய்வதற்கும் வலைஞர்களையே வைத்துப் பணி செய்யப்பட்டுவருகின்றன. மரமேறும் தொழிலுடைய சாணர்களும், அம்பட்டர்களும் கூட கோயிலுக்குள் நுழைந்து தரிசனம் செய்து வருகின்றனர். இக்காரியம் ஷை தேவஸ்தானத்தார் செய்யும் தவறோ அன்றிச் சில தேவஸ்தானங்கள் நீங்கலாக மற்றெல்லாத் தேவாலயங்களிலும் விலக்கப்பட்டவர்கள் கூட உட்செல்லலாமென ஏதேனும் விதியுண்டோ? எனத் தெரிந்து கொள்ளும் பேரார்வமுடையேன். அப்படித் திருவிரும்பூளைத் தேவஸ்தானத்தார் தவறுதலாக யிருப்பின் இனியாவது அத்தவறுதலை யுணர்ந்து தம்மைத் திருத்திக்கொள்ளுவார்களெனவும் எதிர் பார்க்கிறோம்.

---

## 1. ஸ்ரீ ராமர் எமலோகத்திலிருக்கிறார்.

"அந்தச் (எம) சபையில் புண்ணியஞ் செய்த ராஜ ரிஷிகளும் பரிசுத்தர்களான பிரம்ம ரிஷிகளும் மகிழ்ச்சியுடன் யமனை ஸேவிக்கின்றனர். ஸஹதேவன், அர்ஜுனன், தசரத புத்திரர்களான ராம லக்ஷ்மணர்கள், பரசுராமர், ஜனகன் இவர்களும், இருநூறு பீஷ்மர்களும் அங்கிருப்பவராக அறியத் தக்கவர். பாண்டு, தசரதன் இந்தப் புண்ணியசாலிகளும் அந்தச் சபையில் யமதர்மராஜனை ஸேவிக்கின்றனர்."

## 2. விஷ்ணுபாத கங்கையின் கதி.

"(விஷ்ணு) காலைத்தூக்கினதனால் அண்டம் பிளந்தது. அந்தப் பிளப்பின் வழியாய் அவருடைய பாதத்திலிருந்து ஒருநதி பெருகிச் சமுத்திரத்தில் போய் விழுந்தது கடலோடு கலந்த அந்த நதியானது பரிசுத்தமன நதியாயிற்று." (சிவபிரான் அதைத் தம் சிரசில் ஏற்றாரென்பது அவ்வரிகளாற் பொய்யாகிறது. அவ்வரிகள் வாமனாவதார சரித்திர விளக்கத்தில் வந்துள்ளன என்பதும் கவனிக்கற்பாலது).

இவ்விரண்டு விஷயங்களையும் ஸ்ரீ-உபய வே. தி. ஈ. ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள் மொழி பெயர்த்து 1924ல் சென்னை, The India Printing works என்ற அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்ட ஸபாபர்வத்தில் முறையே 8-வது 47-வது அத்தியாயங்களிற் காண்க.

## 3. அநுபந்தம்.

7, 3. சிவநேசனில் வெளியான 'பொன்னேரிச் சந்திப்பு விழா'வென்னும் வியாசத்தைப் பலர் கண்டிருக்கலாம். சென்ற ஒன்றரை வருஷ காலமாக அவ்வூர் ஸ்ரீ அகத்தீசுரப் பெருமானாராலயத்திற்கும் கரி கிருஷ்ணராலயத்திற்கும் ஒருவரே தரும கருத்தாவாக விருந்து வருகிறார். அவர் பெயர் ராஜரத்ந முதலியா ரென்பது. அவ்விராஜரத்ந முதலியார் அச்சந்திப்பு உத்ஸவத்தில் பல மாறுதல்களை உண்டுபண்ணி யிருக்கிறார். அவை முழுதும் மாமூலுக்கு விரோதமும் சைவர்களுக்கு மனக் கொதிப்பை யுண்டு பண்ணக் கூடியவைகளுமா யுள்ளன. அவற்று ளொன்று வருமாறு:—

சந்திப்பு விழாவன்று ஸ்ரீ அகத்தீசுரப் பெருமானார் தம் கோயிலை விட்டுப் புறப்படுமுன்னரே அப் புறப்பாட்டுக்கு ஆகுஞ் செலவைக் கரிகிருஷ்ணர் தம் கோயிலிலிருந்து அவர் கோயிலுக்குக் கொண்டு போய்ச் சமர்ப்பிப்பா ரென்று முன் சொல்லப்பட்டது. அவ் வழக்கத்தை இப் பவ வருஷத்துச் சித்திரையில் நடந்த விழாவில் நம் தருமகருத்த முதலியார் மாற்றிவிட்டார். அவர் ஸ்ரீ அகத்தீசுரப்பெருமானாரைக் கோயிலினின்றுங் கிளப்பிக் கடைத் தெருவிலுள்ள கணக்கப் பிள்ளை சத்திர முகப்புப் பந்தலிற் கொண்டு வந்து நிறுத்திக் தாம் அச்செலவில் எடுத்து வைத்திருந்த பட்டு வஸ்திரமொன்றைக் கரிகிருஷ்ணர் அப் பெருமானார்க்குச் சூட்டும் பாவனையாக அப்பெருமானார் கழுத்தில் அணிவித்தார். தரும கருத்தா அவ்வாறு செய்ததைத் தடுக்க அவ்வூர்ச் சைவர்கள் மிகவும் முயன்றார்கள். பயனொன்றுமில்லை. தாம் இரண்டு கோயில்களுக்குந் தருமகருத்தாவாயிருக்கும் அதிகாரபலத்தாலும், தாமொரு வைஷ்ணவராகையால் அந்த மாமூல் தம் சமயத்துக்குக் குறைவையுண்டு பண்ணு மென்று நினைத்ததாலுந்தான் அவர் அவ்வாறு செய்தா ரென்று வதந்திகள் நிகழலாயின. அம்மாறுதலையும் அது போன்று அவர் செய்துள்ள மற்ற மாறுதல்களையும் வாஸ்தவந்தானா வென்று அறிய ஆசைப்படும் அயலூர்ப் பெரியோர்கள் அவை பழமையாவதற்குள் இப்போதே அவ்வூர் வந்து விசாரித்துத் தெரிந்துகொள்ளலாம். விரிவஞ்சி மற்ற மாறுதல்களை நான் இதிற் சொல்லவில்லை. அவ்வூர்ச் சைவப் பிரமுகர்கள் யுவவருஷத்துச் சித்திரையிலாவது அவ்வுத்ஸவம் மாமூற்படி நடைபெறுமாறு அதிக சிரமமெடுத்தேனும் தரும கருத்தாவை வழிப்படுத்துவார்களாக!

தி. மா. ஸ்ரீநிவாசய்யங்கார்.

---

உ

## சம்பந்தர் திருவிளையாடல்.

திருவிளையாடற் புராணத்தில் சொக்கலிங்கப் பெருமானாது திருவிளையாடல்களாறுபத்து நான்கனுட் சமணரைக் கழுவேற்றியது ஓர் திருவிளையாடல். இத்திருவிளையாடல் புரிந்தவர் திருஞானசம்பந்தரே. திருஞானசம்பந்தர் புரிந்த திருவிளையாடலைச் சொக்கலிங்கத்தினது திருவிளையாடல் என்று உண்மை நூல்கள் கூறுவது என்னை? திருஞானசம்பந்தர் சொக்க லிங்கத்தில் வேறு பொருளல்லாதது கொண்டேயன்றோ ஞானசம்பந்தர் செய்ததைச் சொக்கலிங்கம் செய்ததாக உலகம் ஒப்பியிருக்கின்றது. இந்த ரகஸ்யமுணர்ந்தவர்கள் சொக்கலிங்கம் வேறு, ஞானசம்பந்தர் வேறு என்று சொல்லத் துணியார்கள். அப்படிச் சொல்லத் துணிவார்களாயின், ஞானசம்பந்தர் செய்த திருவிளையாடலைச் சிவன் செய்த திருவிளையாடல் என்று உண்மை நூல்கள் கூறுவதற்கு என்ன நியாயம் தேடுவார்கள்? சிவபெருமான் செய்த திருவிளையாடலை ஞானசம்பந்தர் மேலேற்றிக் கூறின் அது ஞானசம்பந்தரைக் கௌரவித்தற் குபசாரமாகக் கூறியதென்னலாம். அங்ஙனமின்றி ஞானசம்பந்தர்செய்த திருவிளையாடலைச் சிவபெருமான் மேலேற்றிக் கூறினமையால் அது சிவபெருமானைக் கௌரவித்தற் குபசாரமாகக் கூறிய தெனல் கூடாது. இதனால் சிவபெருமானும் அவரில் வேறாகாத ஞானசம்பந்தப் பெருமானும் பிரித்தறியக் கூடாதவொரு முதலென்பதே ஸித்தம். இப்படியே பாண்டியன் சுரந்தீர்த்த திருவிளையாடலினுங் கண்டு கொள்க.

"சகலமதங்களை யெல்லா முணர்ந்த தவமுனிவோர்
புகலுமிலக்க மெண்ணாயிரம் பேரைப் பொருகழுவி
லிகலுறவைத்தும் வருமேத மொன்றின்றியே யிருந்தான்
றிகழுறும் போரியன் சம்பந்தநாமஞ் சிறந்துகொண்டே"

என்னும் பாடலினது கருத்தை ஸாதுக்கள் விசாரித்தறிவார்களாக. தாயைக் கொன்ற பாவம் பரசுராமனுக்கும், இராவணனைக் கொன்ற பாவம் ரகுவீரனுக்கும் நேர்ந்தது எண்ணாயிர முனிவரைக் கழுவேற்றியஎங்கள் கவுணியர் தீபமாகிய பெருந்தகை மெய்யான தெய்வமாதலால் அவரையோர் தோஷமும் அணுகிற்றிலது.

நல். கண்ணப்ப முதலியார்.

186949

## மதிப்புரை மஞ்சரி.

**சைவகாலவிவேகம்:—** நிகமஞான சிவாசாரியரால் இயற்றப்பெற்ற இந்நூல் கணபதிப்பட்டர் இயற்றிய உரையுடன்கூடியது. தேவகோட்டை சிவாகம சங்கத்துவித்வான் வியாகரணசிரோமணி, பிரம்மஸ்ரீ K. M. சுப்ரமண்ய சாஸ்திரிகளால் பரிசோதிக்கப்பெற்று சிவாகமசங்கத்தாரால் அச்சியற்றிவெளியிடப் பெற்றது. எல்லாச்சைவக்கிரியைகளையும் தன்னுட்கொண்டு ஆலயப்பிரதிஷ்டை யாதியவைகளின் காலங்களைக்கூறி பின்னர் செய்யப்படும் நித்யம் நைமித்திகம் காம்யம் ஆகிய கிரியைகளின் காலங்களைக்கூறி நாற்தொன்பது மூலசுலோகங்களால் சைவசம்பந்தமான காலங்களை நிர்ணயிப்பதால் இந்நூல் சைவகாலவிவேகம் எனப்பெயர் பெற்றது. காரணம் காமிகம் அஜிதம், சூக்குமம் முதலிய ஆகமங்களின் ஆங்காங்கு கூறப்பட்ட சைவக்கிரியைகளின் காலங்களைத் தொகுத்துக் கூறுகின்றது.

பிரதிட்டைகள், பூர்வாங்கக்கிரியைகள், நித்தியகன்மம், பூஜாவிதிகள் உத்ஸவாதிகள், விரதங்கள், ஆதிய அனேக சைவக்கிரியைகளுக்குரியகாலங்களும், அவ்வக்கிரியைகளுக்குரிய அரும்பெரும்பல விஷயங்களும் ஆகம வசனங்களாலும் விளக்கப்பட்டு கிரந்தலிபியில் அச்சிடப்பட்டிருக்கின்றது. இந்நூல் சைவ நன்மக்களுக்கு நற்பயன்றருவது இதன் விலை ரூ 1—4—0 வேண்டுவோர் தேவகோட்டை சிவாகம சங்கக்காரியதரிசியவர்கட்கு எழுதிப்பெறலாம். இது தமிழிலும் மொழிபெயர்த்து வருமென தமிழ் மக்கள் பேரார்வ முறுகின்றனர்.

**சர்வ சன சேபம்:—** இது சம்பத்துராய சயினரின் "எதிரிடைகள் இசைவுறுதல்" என்னும் நூலின் இறுதிப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு, ராவ்சாஹிப் திருவாளர், வெ. ப. சுப்பிரமணிய முதலியார் ஜி. பி. வி. வி. அவர்கள் அகவற்பா கஉ௭ அடிகளால் இயற்றியது.

எந்நாட்டினரும், எவ்வினத்தவரும் எம் மதத்தினரும், ஆண் பெண் இருபாலாரும்தீதொழிய நன்மை செய அறிவுறுத்தும் சிறந்த பிரார்த்தனையாகும். ஒருசிறிய நூலின்கண், விதி, விலக்கு, நீதி, ஒழுக்கம்ஆதியமெய்மைகளனைத்தையும் நிறைத்திருப்பது இந்நூலாசிரியரின் திறமையைக் குறிக்கின்றது. இதனையாவரும் பாராயணம் செயற்பாலதே. இதன் விலை அணா ஒன்று. தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் சழகத்தில் திருநெல்வேலியிலும், சென்னையிலும் பெறலாம்.

**சனிப்பெயர்ச்சி மகிமை:—** காரைக்குடி, பி. அ. தேவாரபாடசாலை ஆசிரியர், திரு. அ. நடேச தேசிகர் அவர்களால் எளிய நடையில் எழுதி காரைக்குடி திருவாளர், பனை. மெ. மெ. பழநியப்ப செட்டியாரவர்கள் பொருளுதவி கொண்டு அச்சியற்றி வெளியிடப்பெற்றது. க்ஷேத்திர மகிமையும், சனீஸ்வர பகவான் தோத்திரப் பதிகமும் நவக்கிரகதோத்திரமும் அடங்கியிருக்கிறது.

---



நீங்கும். ஆகையால், சீவன் முத்தர்கள், அகத்தும் புறத்தும் சிவத்தோற்றமொன்றுமே காண்பரன்றித் தேகத்தைப்பற்றிச்சிந்தனை செய்யார். 0"சீவன் முத்தராகி - சிவன்றோற்ற மொன்றுமே காண்பர்" என்றனர் ஸ்ரீ அருணந்தி சிவாசாரியரும். †"மண்மேல் யாக்கைவிடும் ஆறும்வந் துன்கழற்கேபுகுமாறும், அண்ணா எண்ணக்கடவேனோ அடிமைசால அழகுடைத்தே." என்றனர் ஸ்ரீமணிவாசகப்பெருமானாரும். இவ்வாறுகூறிய அவரே ¶"செத்தேபோனாற் சிரியாரோ" என்றனர் பிறிதோரிடத்தில். எண்ணக் கடவேனோ என்றதனோடு சிரியாரோ என்பது முரணாதோ வெனின், கூறுதும். சிரியாரோ என்பது முன்னர்க் கூறப்பட்டது. எண்ணக் கடவேனோ என்பது பின்னர்க் கூறப்பட்டது. சீவன் முத்த நிலையில் சிவாநுபவம் ஒருபடித்தாய் நிகழ்வதில்லை. புதிது புதிதாய் நிகழும். அதாவது, புறத்து விருத்தி சிறிது சிறிதாகக் குறைய, அகத்து சிவாநுபவம் புதிது புதிதாய் நிகழுமென்பதாம். இக்கருத்துப் பற்றியே, *"உணர்ந்தார்க் குணர்வரியோன் தில்லைச் சிற்றம்பலத் தொருத்தன், குணந்தான்—புதிதாய் வளர்கின்றதே" என அவரே அருளிச்செய்தனர். ஆகவே, சிரியாரோ என்ற முந்தின நிலையினும், எண்ணக்கடவேனோ என்ற பிந்தின நிலையே மேம்பட்டதென்றறிந்து கொள்க.

இவ்வாறன்றி, சீவன் முத்தருக்கு யாக்கை நீங்குமுறையும் பரமுத்தியை அடையும் முறையும் பலவாறாதலின், அவற்றை யான் எண்ணக் கடமைப்பட்டவனல்லன்; ஆயினும், இன்னுமோர் பிறவியைப் பொருந்துமாறு இவ்வுடல் பிணமாய் விழுதல் மட்டும் என்னால் விரும்பத் தக்கதில்லையென்றாரென்றலுமாகும். சீவன் முத்தருக்கு யாக்கை நீங்குமுறை - தேவலோகத்திற்குரிய பூதசாரசரீரமாய் மாறுதல், ஒளியிற் கலத்தல், வெளியிற் கலத்தல், நிட்டையில் நீங்காதிருத்தலால் தோன்றாது வெளியாய்க்கரைதல் முதலாகப் பலதிறப்படும். ஸ்ரீ மணிவாசகப் பெருந்தகையாரது உடல் ஞான வெளியிற் கலந்தது. ஸ்ரீ மெய்கண்டதேவர் முதலாயினாரது உடல் நிட்டையில் நீங்காதிருத்தலால் ஞானவெளியிற் கலந்தது. காரியங்களனைத்தும் தத்தங்காரணங்களிலன்றோ ஒடுங்கவேண்டும். அவ்வாறன்றி மாயாகாரியமானவுடல் ஞான வெளியிற் கலந்த தென்பது எவ்வாறு பொருந்துமெனின், மாயாகாரியம் மாயையிலொடுங்கு மென்பது உண்மை. மாயை, ஞானவெளியாய் விளங்கும் இறைவனுக்குப் பரிக்கிரக சத்தியென்

---

0 சிவஞானசித்தியார் அம் சூ-ம் செ. உக.

† திருவாசகம் குழைத்தபத்து செ. க.

¶ திருவாசகம் கோயில் மூத்த திருப்பதிகம் செ. அ.

* திருக்கோவையார் செ. க.

பதும் உண்மை. மாயை ரூபமில்லாத தென்பதும் உண்மை. ஆகையால் உடல், மாயையில் ஒடுங்குதலென்பது இறைவனுடைய பரிக்கிரக சத்தி ரூபமாய் ஒடுங்குதலென்னும் பொருளைத் தந்து, ஞானவெளியிற் கலந்தது என்பது பெறப்படுமாறு காண்க.

பரிக்கிரக சத்தி - இறைவனை விட்டுத் தனித்து நில்லாது அவனுள் அடங்கியிருந்து அவன் வேண்டும்போது தொழிற்படும் சத்தி. சீவன் முத்திக்குப் பின் உண்டாகும் பரமுத்தியும் - அதிகாரமுத்தி, போகமுத்தி, லயமுத்தி, பரமுத்தியெனப் பலவகைப்படும். இவற்றின் விரிவை சிவஞான போதச் சிற்றுரை விளக்கத்து ஆறும் சூத்திரத்து இறுதியிற் காண்க. (௩௪)

(அ - கை.) சீவன் முத்தன், தேகத்தோடு கூடியிருக்கும்பொழுதே பரமுத்தியை அநுபவிப்பன் எனக் கூறுகின்றார்.

35. ஆகத்தே யாங்கார வடிவ தாகி
யருவினைசெய் தகங்கார மாகு மாய
மோகத்தைத் துறக்கின்மொழி யிற்படாத
முத்திதல மினிதளிக்கு மொழிந்த தன்றிச்
சோகத்தைத் தருமுடலை யெல்லாம் விட்டுச்
சேராத வறிவாகிச் சுத்த ரூப
மாகத்தான் பாவித்தாற் சத்தி யெல்லா
மறவிடுகை பரமார்த்த மறிவார் தாமே.

(இ - ள்.) தாம் - சீவன்முத்தர், ஆகத்தே ஆங்காரவடிவது ஆகி - (சரீரத்துடன் கூடி நிற்குங் காலத்து) சரீரமே யானென்னும் சொரூபமாய் நின்று, அருவினைசெய்து - செய்தற்கரிய யோக வினைகளைச்செய்து, மாய அகங்காரம் ஆகும் மோகத்தை துறக்கின் - மயக்கத்தாலுண்டாகும்தற்போத மாகிய அறியாமையை நீக்கின், மொழியில் படாத முத்திதலம் இனிது அளிக்கும் - (அங்கீக்கம்) வாக்கு மனங்கட்கு எட்டாத பரமுத்தித் தானத்தை எளிதாய்க் கொடுக்கும், மொழிந்தது அன்றி - சொல்லப்பட்ட இவ்வாறன்றி, சோகத்தை தரும் உடலை எல்லாம் விட்டு - துன்பத்தைத் தரும் சரீரப்பற்றை அறவே விட்டு, சேராத சுத்த அறிவு ரூபமாக ஆகி - சரீரம் தோன்றாத சுத்தமான அறிவு சொரூபமாய் நின்று, தான் பாவித்து சத்தியெல்லாம் அறவிடுகையால் - தன்னையே சிந்தித்து சிந்திக்கின்றோமென்னும் தற்போதம் சிறிதுந் தோன்றாதவாறு நீக்குதலால், பரமார்த்தம் அறிவார் - பரமுத்தியை அநுபவிப்பர் எ - று.

(பொ - ரை.) சீவன் முத்தர், சரீரத்துடன் கூடி நிற்குங் காலத்து, சரீரமே யானென்னுஞ் சொரூபமாய் நின்று செய்தற்கரியயோகவினைகளைச்



செய்து, மயக்கத்தாலுண்டாகும் தற்போதமாகிய அறியாமையை நீக்கின், அங்கீக்கம், வாக்கு மனங்கட்கு எட்டாத பரமுத்தித் தானத்தை எளிதாய்க் கொடுக்கும். சொல்லப்பட்ட இவ்வாறன்றி, துன்பத்தைத் தரும் சரீரப் பற்றை அறவே விட்டு, சரீரந்தோன்றாத சுத்தமான அறிவு சொரூபமாய் நின்று தன்னையே சிந்தித்துச் சிந்திக்கின்றோ மென்னும் தற்போதம் சிறிதுந் தோன்றாதவாறு நீக்குதலால் பரமுத்தியை அநுபவிப்பர் எ - று.

(க - ரை.) சீவன் முத்தர் சரீரந்தோன்றும் நிலையினும் தோன்றாத நிலையினும் அறிவு ரூபமாய் நின்று தன்னையே சிந்தித்தலால் பரமுத்தியை அநுபவிப்பர் என்பதாம்.

ஆகத்தே என்றவிடத்து அத்து சாரியை. ஏ அசை. ஆகம் - சரீரம்.

அகங்காரம் இரண்டனுள், முன்னையது யான் என்னும் பொருளையும். பின்னையது தற்போதம் என்னும் பொருளையுங் குறித்தன.

உடல் என்பது உடற்பற்றைக் குறித்தது.

சேராமை - தோன்றாமை.

தன் என்பது தான் என நீண்டது. அவ்விடத்து ஐயுருபு விரித்துரைக்க.

சத்தி - தற்போதம். அது, சிந்திக்கின்றோம், சிந்திக்கின்றோம் என்னும் சிந்தனையை விட்டிருக்கின்றோ மென்பன வாதியாகப் பலதிறப் படுதலின், எல்லாம் எனப்பட்டது.

பரமார்த்தம் - பரமுத்தி. அதாவது, சரீரந் தோன்றாத நிலை. நீங்காத நிட்டையால் சீவன் முத்தன் அதனை யநுபவித்தல் கூடும்.

அநுபவம் என்பது அறியப்பட்ட பொருளிலழுந்துதல். ஆகையால் அறிவார் என்பதற்கு அநுபவிப்பார் என்றுரைத்தாம்.

தாமே என்றவிடத்து ஏகாரம் அசை. (௩௫)

(அ - கை.) சீவன் முத்தன் வருண ஆச்சிரம தருமங்களைப் பற்றற விட்டுத் தன்னையே தியானிக்க வேண்டுமெனக் கூறுகின்றார்.

36. வைய மாச்சிர மம்மென வைத்தவும்
செய்ய சாதி குலமெனச் சேர்த்தவும்
ஐய மின்றி யறவிட் டறிந்தவர்
செய்ய ஞானத் திரளைச்சிந் திக்கவே.

(இ - ள்.) அறிந்தவர் - ஞானிகள், வையம் - உலகத்தின்கண், ஆச்சிரமம் எனவைத்த உம் - பிரமசரியம் கிருகத்தம் வானப்பிரத்தம் சந்நியாசமென்று அநுட்டிக்கப்பட்டனவும், செய்ய சாதிகுலம் என சேர்த்தஉம் -

உயர்ந்தசாதி உயர்ந்தகுலமென்று அமைக்கப்பட்டனவும், (ஆகியஇவற்றை) ஐயம் இன்றி அறவிட்டு - சந்தேகமின்றிப் பற்றறவிட்டு, செய்ய ஞானத் திரளைச் சிந்திக்க - ஒளிரூபமான பரம்பொருளைத் தியானிக்கக் கடவர் எ - று.

(பொ - ரை.) ஞானிகள், உலகத்தின்கண் பிரமசரியம் கிருகத்தம் வானப்பிரத்தம் சந்நியாச மென்று வைக்கப்பட்டனவும் உயர்ந்த சாதி உயர்ந்த குலமென்று அமைக்கப்பட்டனவும், (ஆகிய இவற்றை) சந்தேகமின்றிப் பற்றறவிட்டு ஒளிரூபமான பரம்பொருளைத் தியானிக்கக் கடவர் எ - று.

(க - ரை.) சீவன் முத்தராகிய ஞானிகள், வருணாச்சிரமப் பற்றை விடக் கடவர் என்பதாம்.

வையம் என்ற விடத்து அத்து இன்சாரியைகளும் கண்ணுருபுந் தொக்கு நின்றன.

ஆச்சிரமம் அநுட்டிக்கப்படும் நிலையாதலின், அவ்வுயர்வுபற்றி அதனை முன்னரும், சாதிகுலம் என்பன பிறப்புப் பற்றி அமைக்கப்படுதலின், அதனைப் பின்னரும் வைத்தார்.

வைத்தல் - அநுட்டித்தல்.

சேர்த்தல் - அமைத்தல்.

வருணாச்சிரம தருமங்கள் அநுட்டிக்கப்பட வேண்டுமா வேண்டாமா என்ற சந்தேகம் உள்ள அளவும் அநுட்டிக்கப்படவே வேண்டும்; உறங்கினவன் கையிலுள்ள பொருள் அவன்பற்றின்றி நீங்குமாறுபோல, பரம்பொருளைப் பற்றி நிற்றலால் அவை தாமே நீங்கவேண்டுமென்பது தோன்ற ஐயமின்றி அறவிட்டு என்றார்.

செய்ய இரண்டனுள், முன்னையது உயர்வு. பின்னையது ஒளி. உயர்வு கூறவே இழிவுங் கொள்ளப்படும்.

ஞானத்திரள் - பரம்பொருள். ஞானம், இச்சை, கிரியை யென்னும் மூன்றும் தனித் தனி குணரூபமாயிருக்கும். அம்மூன்றன் கூட்டம் குணி ரூபமாயிருக்கும். குணி - பொருள்.

ஈற்றிலுள்ள ஏகாரம் அசை. (௩௬)

(அ - கை.) சீவன் முத்தன் பிறிதொன்றன் வசப்படாமல் தன் வயத்தனாய் விளங்குவன் எனக் கூறுகின்றார்.

37. கடைபடு முலகிய றன்னைக் காண்குறின்
உடையவ ரெனையிலை யானுடை யாரிலை



அடையவு மெனக்கிலை யானு மன்னதே
நடையிது நிலையெனிற் றமிய னனரோ.

(இ - ள்.) கடைபடும் உலகு இயல் தன்னை காண்கு உறின் - இழிவாகிய உலக நடையைப் பார்க்குமிடத்து, எனை உடையவர் இலை - என்னை உடைமைப் பொருளாகக் கொண்டவர் ஒருவரும் இல்லை, யான் உடையார் இலை - என்னுடையவராகவும் ஒருவருமில்லை, எனக்கு அடையவும் இலை - எனக்கு வந்துசேரும் பொருளுமில்லை, யானும் அன்னதே - யான் சென்று அடையும் பொருளுமில்லை, நடை நிலை இது எனில் - உலகநடையின் நிலைமை இவ்வாறாயின், நான் தமியன் - நான் தனியனாவன் எ - று.

(பொ - ரை.) இழிவாகிய உலகநடையைப் பார்க்கு மிடத்து, என்னை உடைமைப் பொருளாகக் கொண்டவர் ஒருவருமில்லை. என்னுடையவராகவும் ஒருவருமில்லை. எனக்கு வந்து சேரும் பொருளுமில்லை. யான் சென்று அடையும் பொருளுமில்லை. உலக நடையின்நிலைமையிவ்வாறாயின், நான் தனியனாவன் எ - று.

(க - ரை.) சீவன் முத்தன் ஒன்றினுந் தோய்வின்றித் தனித்த சிவனாய் விளங்குவன் என்பதாம்.

கடைப்படு மென்பது கடைபடுமென நின்றது. கடைப்படுதல் - இழிவாதல். அது நிலைபேறின்மையைக் குறித்தது.

உலகத்தில், தனக்கு உடைமைப் பொருளாகப் பிறிதொருவரும், பிறிதொருவருக்கு உடைமைப் பொருளாகத் தானுமாய்க் காணப்படுவனவும் பிறவும் நிலைபேறின்றி மாறுவன வாகையாலும், அவையனைத்தும் உடலைப் பற்றி நிகழ்வனவே யன்றி உயிரைப் பற்றி நிகழ்வன இல்லையாகலானும், உயிராகிய தன்னைத் தனியன் என்றார். எனவே, இவ்வுண்மையினை உணர்ந்த சீவன் முத்தன், ஒன்றினுந் தோய்வின்றித் தனியனாய் நிற்கும் சிவனாய் விளங்குவ னென்பது பெறப்பட்டது. அடுத்துவரும் செய்யுள் இக்கருத்தினை வலியுறுத்தும்.

அரோ - அசை. (௩௭)

(அ - கை.) சீவன் முத்தன் சிவமாய் விளங்குவ னெனக் கூறுகின்றார்.

38. நித்தனும் பரமேசன் யானென்று நிச்சயிக்கின்
முத்தனல னெனினுமவன் முத்தனா முயிருடம்பின்
பெத்தமற ஞானத்தாற் காட்சிபெறிற் சாந்தியுடைச்
சித்தனாய்ப் பொருட்பற்றுத் தீர்ந்துவீ டடையுமால்.

(இ - ள்.) முத்தன் அலன் எனினும் - பெத்தனாக இருப்பினும், அவன் - அப் பெத்தன், நித்தன் ஆம் பரமேசன் யான் என்று நிச்சயிக்கின் முத்தன் ஆம் - எக்காலத்தும் ஒரு தன்மையாய் விளங்கும் சிவம் நானென்று திடமாகக் கருதுவனாயின் முத்தனாவன், உயிர் உடம்பின் பெத்தம் அற - உயிரானது உடம்பின் வசப்பட்டு அவ்வுடம்பே தானாய் நிற்கும் அறியாமை நீங்க, ஞானத்தால் காட்சிபெறின் - சிவஞானத்தால் சிவன்நானென்று அறியின், சாந்தி உடை சித்தன் ஆய் - வேண்டுதல் வேண்டாமையில்லாத சீவன்முத்தனாய், பொருள் பற்று தீர்ந்து வீடு அடையும் - உடம்பின் சார்பானஉலகப் பொருள்களின் பற்று நீங்கிப் பரமுத்தியை அடையும் எ - று.

(பொ - ரை.) பெத்தனாக இருப்பினும் அப் பெத்தன், எக்காலத்தும் ஒரு தன்மையாய் விளங்கும் சிவம் நானென்று திடமாகக் கருதுவனாயின் முத்தனாவன். உயிரானது, உடம்பின் வசப்பட்டு அவ்வுடம்பே தானாய் நிற்கும் அறியாமை நீங்க சிவஞானத்தால் சிவன் நானென்று அறியின் வேண்டுதல் வேண்டாமை யில்லாத சீவன் முத்தனாய் உடம்பின் சார்பான உலகப் பொருள்களின் பற்று நீங்கிப் பரமுத்தியை அடையும் எ - று.

(க - ரை.) சீவன் முத்தன், சிவஞானத்தால் சிவன் நானென்றறிந்து சிவனாய் விளங்குவன் என்பதாம்.

உடம்போடு கூடி நிற்கும் பெத்த நிலை சீவன் முத்தநிலைகளை உயர்திணை ஆண்பால் மேல் வைத்தும், உடற் பற்று நீங்கித் தனித்துச் சிவனாய் நிற்கும் பரமுத்தி நிலையை உயிரென அஃறிணைமேல் வைத்துங் கூறினாராகலின், திணைவழுவின்மை யறிக.

பதிபசு பாசமென்னும் முப்பொருள்களும் உற்பத்தி நாசமற்ற நித்தமாயினும், பசு, பெத்தநிலை முத்தி நிலை யென்னும் வேறுபாட்டுடனும், பாசம், காரண ரூபமாய் ஒடுங்கி நிற்றல் காரியரூபமாய் வெளிப்பட்டு நிற்ற லென்னும் வேறுபாட்டுடனும் கூடி நித்தமாம். பதி, அவ்வாறின்றி எக்காலத்தும் ஒரு தன்மையாய் விளங்கும் நித்தமாதலின், நித்தன் என்னும் விசேடணம் பசு பாசங்கட்குப் பொதுவாய் பரமேசனுக்கே சிறப்பாதல் காண்க.

நிச்சயிக்கின் என்பது நிச்சயிக்க மாட்டாமை குறித்தது.

முத்தன் அலன் எனினும் என்றவிடத்து உம்மை பெத்தத்தின் இழிவைக் குறித்தலின் இழிவு சிறப்பு.

சாந்தி - விருப்பு வெறுப்பில்லாமை.

சித்தன் - சீவன் முத்தன். அஷ்டப் பிரகரணத்துள் மோக்ஷகாரிகை 126, 127-வது சுலோகங்களைப் பார்க்க.



வீடு - இவ்விடத்து பரமுத்தியைக் குறித்தது.

ஆல் - அசை. (௩௮)

(அ - கை.) பிறப்பில்லாதவன்நானே; பிறப்பில்லாத ஆன்மாவும் நானே யெனக் கூறுகின்றார்.

39. எல்லையிலா நூல்களெலாம் பிறப்பிலியே யீசனெனச்
சொல்லுகின்ற வத்தாநான் சொலப்படுமக் குணந்தொடரும்
அல்லலிலா வான்மாவா யறிவளவை யளக்கின்ற
தெல்லையிலா தெனினுநா னிதிலைய மிலையறிநீ.

(இ - ள்.) ஆய் அறிவு அளவை அளக்கின்றது எல்லை இலாது எனினும் - (என்தன்மை) ஆராயும் அறிவாலும் அளவைகளாலும் அளத்தற்கு அளவுபடாததாயினும், எல்லையிலா நூல்கள் எலாம் பிறப்பிலியே ஈசன் என சொல்லுகின்ற - அளவில்லாத நூல்களனைத்தும் பிறப்பில்லாதவனே ஈசனெனச் சொல்லுகின்றன, வத்தா நான் - அவ்வாறு சொல்லுகின்றவன் நானே, சொலப்படும் அக்குணந் தொடரும் அல்லல் இலா ஆன்மா நான் - (அந்த நூல்களிற்) சொல்லப்படும் பிறப்பின்மையைப் பொருந்துதலால் துன்பம் இல்லாத ஆன்மாவும் நானே, இதில் ஐயம்இலை நீ அறி - இதிற் சந்தேகமில்லை நீ அறிவாயாக எ - று.

(பொ - ரை.) என் தன்மை, ஆராயும் அறிவாலும் அளவைகளாலும் அளத்தற்கு அளவுபடாத தாயினும், அளவில்லாத நூல்களனைத்தும் பிறப்பில்லாதவனே ஈசனெனச் சொல்லுகின்றன. அவ்வாறு சொல்கின்றவன் நானே. அந்த நூல்களிற் சொல்லப்படும் பிறப்பின்மையைப் பொருந்துதலால் துன்பம் இல்லாத ஆன்மாவும் நானே. இதிற் சந்தேகமில்லை நீ அறிவாயாக எ - று.

(க - ரை.) மேலொரு பிறவியைப் பொருந்தாத ஆன்மா நானே என அம்பிகைக்கு ஈசுவரர் கூறி முத்தன் பெருமையை விளக்கினாரென்பதாம்.

பிறப்பிலியே என்றவிடத்து ஏகாரம் பிறப்புடையது சீவன் என விலக்கலின் பிரிநிலை.

வத்தா - சொல்கின்றவன். வக்தா என்னும் வடமொழி வத்தா எனத் திரிந்தது.

அகரச் சுட்டு மேலே கூறப்பட்ட பிறப்பின்மையைச் சுட்டிற்று.

தொடரும் என்றதனால், ஈசுவரனைப் போல் இயல்பாகவே பிறப்பின்மையின்றி இனிவரும் பிறப்பின்மையுடைய ஆன்மா என்பது விளக்கிய வாறாம்.

தொடருதலால் என்னும் காரணப் பொருளில் தொடரும் என நின்றது; மழை பெய்யும் நெல்விளையும் என்றாற் போல.

அளக்கின்றது என்பது அளத்தல் என்னுந் தொழில் மேல் நின்றது. செய்கின்றது நலம் என்றாற் போல. அவ்விடத்து குவ்வுருபு தொக்கது.

எனினும் என்ற விடத்து உம்மை சிறப்பு. (௩௯)

(அ - கை.) சிவமாய் விளங்கும் சீவன் முத்தன், தன்மையை விளக்கிக் கூறுகின்றார்.

40. அறிவாகிச் சுத்தனா யறிவானாய் வேறாகிக்
குறியாது கொளல்வீடு கூடாது கூறுங்கால்
அறிவான்றா னிலனாகிச் சோகாதி யடையானாய்ப்
பிறியாத பரப்பிரம மெனநிற்பன் பெண்ணணங்கே.

(இ - ள்.) பெண் அணங்கே - பெண்களிற் சிறந்த அழகினையுடையவளே, கூறுங்கால்- சீவன் முத்தன் நிலையைக்கூறு மிடத்து, அறிவாகி - அறிவே வடிவாய், சுத்தன் ஆய் - மலமில்லாதவனாய், அறிவான் ஆய் - எல்லாவற்றையும் அறிபவனாய், வேறாகி குறியாது - (அறியுங்கால்) அவற்றின் வேறாய் நின்று சுட்டி யறியாது, கொளல் வீடு கூடாது - பற்றுதலும் விடுதலுமின்றி, அறிவான்தான் இலனாகி - அறிகின்றதானும் தோன்றாதவனாய், சோகம் ஆகி அடையான் ஆய் - துன்ப இன்பங்களைப் பொருந்தாதவனாய், பிறியாத பரப்பிரமம் என நிற்பன் - தன்னை விட்டு நீங்காத பரம சிவமாய் விளங்குவன் எ - று.

(பொ - ரை.) பெண்களிற் சிறந்த அழகினை உடையவளே! சீவன் முத்தன் நிலையைக் கூறுமிடத்து, அறிவே வடிவாய், மலமில்லாதவனாய், எல்லாவற்றையும் அறிபவனாய், அறியுங்கால் அவற்றின் வேறாய் நின்றுசுட்டி யறியாது, பற்றுதலும் விடுதலுமின்றி, அறிகின்றதானுந் தோன்றாதவனாய், துன்ப இன்பங்களைப் பொருந்தாதவனாய், தன்னை விட்டு நீங்காத பரம சிவமாய் விளங்குவன் எ - று.

(க - ரை.) சீவன் முத்தன், எல்லாவற்றையும் அறிந்தும் ஒன்றினும் பற்றின்றிச் சிவமாய் விளங்குவன் என்பதாம்.

பிரமம் சிவம் என்பன ஒரு பொருட் சொற்கள் (௪௰)

(அ - கை.) சீவன் முத்தன் தன்னுடலைக் கனவுபோலக் காண்பன் எனக் கூறுகின்றார்.

41. நீடிய தலைகாலெங்கு நிறைமயிர்த் தோலினாலே
மூடியவுடலுங் காணுங் கனவெனு முளத்தனாகிக்
கூடிய விதனின்ஞானக் குறியுடைத்துயிரே யென்றுங்
கேடிலாதென்று நோக்கிற் கேடிலாஞான மாகும்.



(இ - ள்.) தலை கால் எங்கும் நிறைமயிர் தோலினால் மூடிய நீடிய உடலும் - தலைமுதல் கால் அளவுமுள்ள எல்லாவிடங்களும் நிறைந்த மயிராலும் தோலாலும் மூடப்பட்டு நீண்டிருக்கின்ற உடலையும், கனவு எனும் காணும் உளத்தன் ஆகி - கனவுபோலக் காணுங் கருத்துடையனாகி, கூடிய இதனில் - பொருந்திய இவ்வுடம்பினிடத்து, உயிர் ஞானக்குறி உடைத்து என்றும் - உயிரானது அறிவாகிய அடையாளத்தை உடையது என்றும், கேடு இலாது என்றும் - கெடுதலில்லாதது என்றும், நோக்கின் - அறியின், கேடுஇலா ஞானம் ஆகும் - அவ்வறிவு கெடுதலில்லாத அறிவாகும் எ - று.

(பொ - ரை.) தலைமுதல் காலளவுமுள்ள எல்லா இடங்களும் நிறைந்த மயிராலுந் தோலாலும் மூடப்பட்டு நீண்டிருக்கின்ற உடலையும் கனவு போலக் காணுங் கருத்துடையனாகி, பொருந்திய இவ்வுடம்பினிடத்து உயிரானது அறிவாகியஅடையாளத்தைஉடையது என்றும், கெடுதலில்லாதது என்றும் அறியின் - அவ்வறிவு கெடுதலில்லாத அறிவாகும் எ - று.

(க - ரை.) சீவன் முத்தன், தன்னுடம்பைக் கனவு போலவும் உயிரை ஞான ரூபமாகவும் காண்பன் என்பதாம்.

நீடிய என்பது பெயரெச்சம். அது, உடலென்னும்பெயர்கொண்டது.

மூடிய என்பது வினையெச்சம். அது, நீடிய என்னும் பெயரெச்ச வினை கொண்டது.

உடல் என்ற விடத்து ஐயுருபு தொக்கது. உம்மை உடலின் இழிவைக் குறித்த இழிவு சிறப்பு.

குறி - அடையாளம். இதுகாறும் காணப்படாத ஒரு பொருளைக் காணவேண்டுமாயின், அப்பொருளுக்குரிய அடையாளத்தைக் கொண்டு காண்டல் உலக வழக்காதலின், அவ்வழக்குப் பற்றி உயிர் இதுவெனக் காணுதற்கு அறிவை அடையாளமாகக் கூறினார். கூறவே, உயிரின் வடிவம் அறிவென்பது பெறப்படுமாறு காண்க.

உடல் அழியுந் தன்மையுடையது ஆதலின், அதனையறியும் அறிவு அழியும். உயிர் நித்தப் பொருளாதலின் அதனுண்மையினை உள்ளவாறு அறியும் அறிவை கேடிலா ஞான மென்றார்.

தோலினாலே உயிரே என்ற விடங்களிலுள்ள ஏகாரம் இரண்டும் அசை. (௪௧)

(அ - கை.) உயிர்களனைத்திற்கும் தலைவனாகவும் தாய் தந்தையாகவும் நான் இருக்கின்றேன் எனக் கூறுகின்றார்.

42. நிற்பனவு நடப்பனவு மாயியங்கு நீடுயிர்கட்
கொப்புடைய தாய்தந்தை யீசனுமா யுள்ளேனன்
கைப்படவு முத்தியினிற் காமராய்த் துரியத்தே
நிற்பவர்க ளருச்சனையா லென்னையே நினைவரால்.

(இ - ள்.) நிற்பனவும் - போக்குவரத் தின்றி நிற்கும் அசரமும், நடப்பனவும் - போக்குவரத்தினையுடைய சரமும், ஆய் இயங்கும் நீடு உயிர்கட்கு - ஆகி விளங்கிக்கொண்டிருக்கும் நிலைபெற்ற உயிர்களுக்கு, ஒப்பு உடைய தாய் தந்தை ஈசனும் ஆய் நான் உள்ளேன் - பொருத்த முடைய தாயாயும் தந்தையாயும் தலைவனாயும் நான் இருக்கின்றேன். (ஆகையால்) முத்தியினின் கைப்பட காமராய் துரியத்து நிற்பவர்கள் உம் - (போகாநுபவத்தை விரும்புவோர் மட்டுமன்றி) முத்திநிலையின் அநுபவம் வருதற்கு விருப்பமுடையவராய்ச் சுத்த நிலையில் நிற்பவர்களும், என்னையே அருச்சனையால் நினைவர் - என்னையே அருச்சிக்கு முறையால் தியானிப்பர். எ - று.

(பொ - ரை.) போக்கு வரத்தின்றி நிற்கும் அசரமும், போக்குவரத்தினையுடைய சரமும் ஆகி விளங்கிக்கொண்டிருக்கும் நிலைபெற்ற உயிர்களுக்குப், பொருத்தமுடையதாயாயும் தந்தையாயும் தலைவனாயும் நானிருக்கின்றேன். ஆகையால், போகாநுபவத்தைவிரும்புவோர் மட்டுமன்றி முத்திநிலையின் அநுபவம் வருதற்கு விருப்பமுடையராய்ச் சுத்த நிலையில் நிற்பவர்களும், என்னையே அருச்சிக்கு முறையால் தியானிப்பர் எ - று.

(க - ரை.) போகத்தை விரும்புவோரும் முத்தியை விரும்புவோரும் என்னையே பிரார்த்திப்பர் என்பதாம்.

நீடுதல் - நிலைத்திருத்தல்.

தாய் - இதத்தைச் செய்பவள். தந்தை - இதத்தை உபதேசிப்பவன். தலைவன் - இன்னது செய்யவேண்டும் இன்னது செய்யக்கூடா தென்று கட்டளையிட்டு, அக்கட்டளையை மேற்கொண்டவரைக் காத்தலும் மீறினவரைத் தண்டித்தலுஞ் செய்யும் ஆற்றலுடையவன். உலகத்திற் காணப்படும் தாய் தந்தையரும் தலைவனும் எக்காலத்தும் நிலைபெறுதலில்லையாகையால், உயிரோடு எக்காலத்தும் பிரிப்பின்றி நிலைபெற்றிருக்கும் நானே தாய் தந்தை தலைவன் என்பதற்குப் பொருத்தமுடையவன் என்பது உணர்த்த வேண்டி ஒப்புடைய என்னும் விசேடணங் கொடுத்துக் கூறினார். ஈசன் - தலைவன்.



கைப்படுதல் - அநுபவமாய் வருதல். உம்மையை நிற்பவர்களென்பதனோடு கூட்டி இறந்தது தழுவியதாய்க் கொள்க.

துரியம் - சுத்தநிலை.

அருச்சனையால் நினைவர் என்றதனால், போக மோக்ஷங்களை விரும்புவோர் சிவபெருமானைப் பூசித்துப்பெறவேண்டு மென்பது பெறப்பட்டது.

என்னையே என்றவிடத்துள்ள ஏகாரம், பிறந்திறந்துழலும் ஏனைய தெய்வங்களை விலக்கலின் பிரிநிலை.

துரியத்தே என்ற விடத்துள்ள ஏகாரமும் ஈற்றிலுள்ள ஆல் என்பதும் அசை. (௪௨)

(அ - கை.) பிரமன் முதலிய அனைவரும் என்னையே வழிபடுவரெனக் கூறுகின்றார்.

43. நான்முகன் முதலாந்தேவர் நரர்நாக ரியக்கர்சித்தர்
ஏனையோ ரெச்சமெல்லாம் விதிகளுமென்னைப் போற்றும்
ஆனபின்னவனே பூசைக்கருக னென்றறிந்தோ ரெல்லாம்
தேனமர்குழலாய் நெஞ்சாற் சிறந்தனவெனக்கே செய்வார்.

(இ - ள்.) தேன் அமர்குழலாய் - வண்டுகள் விரும்பி மொய்க்கின்ற கூந்தலை உடையவளே! நான் முகன் முதலாம் தேவர் - பிரமன் முதலிய தேவர்களும், நரர் - மனிதர்களும், நாகர் - கீழுலகத்தவர்களும், இயக்கர் - கந்தருவர்களும், சித்தர் - சித்தர்களும், எச்சம் ஏனையோர்எல்லாம் - எஞ்சிய ஏனையோரனைவரும், விதிகளும் - செய்யும் செயல்களனைத்தும், என்னை போற்றும் - என்னைப் பேணிநிற்கும், ஆனபின் - ஆகையால், அறிந்தோர் எல்லாம் - இவ்வுண்மையினை உணர்ந்தோ ரனைவரும், அவனே பூசைக்கு அருகன் என்று - அவ்வாறு பேணுந் தகுதி வாய்ந்தவனே பூசித்தற்கு உரியவனென்று கருதி, சிறந்தன நெஞ்சால் எனக்கே செய்வார் - சிறப்பான பூசைகளை அன்புடன் எனக்கே செய்வார் எ - று.

(பொ - ரை.) வண்டுகள் விரும்பி மொய்க்கின்ற கூந்தலை உடையவளே! பிரமன் முதலிய தேவர்களும், மனிதர்களும், கீழுலகத்தவர்களும், கந்தருவர்களும், சித்தர்களும் எஞ்சிய ஏனையோ ரனைவரும் செய்யும் செயல்களனைத்தும் என்னைப் பேணி நிற்கும். ஆகையால், இவ்வுண்மையினை உணர்ந்தோரனைவரும் அவ்வாறு பேணுந் தகுதி வாய்ந்தவனே பூசித்தற்கு உரியவனென்று கருதி சிறப்பான பூசைகளை அன்புடன் எனக்கே செய்வார் எ - று.

(க - ரை.) பிரமன் முதலிய அனைவர் செய்யும்செயல்களும் என்னைப் பேணி நிற்குமாகையால், அறிந்தோரனைவரும் அன்புடன் என்னையே பூசிப்பர் என்பதாம்.

போற்றுதல் - பேணுதல். விதி - செய்யுஞ் செயல்.

ஆனபின் - போற்றுதலைத் தெளிவித்த சொல்.

தேன் - வண்டு. அமர்தல் - விரும்புதல்.

செய்யும் செயல்களுள், சிறந்தது பூசையாதலின், பூசையை சிறந்ததென்னும் சொல்லாற் கூறினர்.

நெஞ்சு - நெஞ்சினிடத்து நிகழும் அன்பைக் குறித்தது.

எனக்கே என்றவிடத்து ஏகாரம் பிறரை விலக்கலின் பிரிநிலை. (௪௩)

(அ - கை.) தவந் தானம் முதலியவற்றை ஏற்றுக்கொள்பவன் நானே யெனக் கூறுகின்றார்.

44. ஆற்றரிய தவம்பலபூண் டடவியழல் கால்சயிலம்
போற்றரிய புனல்வெயிலூண் டுறந்துநின்று பொறுப்பதுவும்
ஏற்றவருக் குயிருடம்பு முதலாக வீவதுவும்
நாற்றிசையோர் பூசையிவை நான்கொள்வே னென்றேகாண்.

(இ - ள்.) நாற்றிசையோர் - நான்கு திக்குகளுக்குட்பட்டிருப்பவரனைவரும், ஆற்ற அரியதவம் பலபூண்டு - செய்தற்கரிய தவங்கள் பலவற்றை மேற்கொண்டு, ஊண் துறந்து - உணவை நீக்கி, போற்ற அரிய அடவி அழல்கால் சயிலம் புனல் வெயில் நின்று பொறுப்பதும் - பேணுதற்கரிய வனத்திலும் அக்கினியைக் கக்கும் மலையிலும் (குளிர் காலத்தில்) நீரிலும் (கோடை காலத்தில்) வெயிலிலும் நின்று (அவற்றாலுண்டாம்) துன்பத்தைப் பொறுத்தலும், ஏற்றவருக்கு உயிர் உடம்பு முதலாக ஈவதும் - வறியராய் வந்து இரந்தவர்க்கு உயிரையும் உடம்பையும் ஏனைய பொருள்களையும் கொடுத்தலும், பூசை இவை - தக்கோர்க்குச் செய்யும் ஆராதனைகளுமாகிய இவற்றை, நானே கொள்வேன் என்று காண் - நானே ஏற்றுக்கொண்டு பலன்றருவன் என்று அறிவாயாக எ - று.

(பொ - ரை.) நான்குதிக்குகளுக்குட்பட்டிருப்பவரனைவரும், செய்தற்கரிய தவங்கள் பலவற்றை மேற்கொண்டு, உணவை நீக்கி, பேணுதற்கரிய வனத்திலும் அக்கினியைக் கக்கும் மலையிலும் குளிர் காலத்தில் நீரிலும் கோடைகாலத்தில் வெயிலிலும் நின்று அவற்றாலுண்டாந் துன்பத்தைப் பொறுத்தலும், வறியராய் வந்து இரந்தவர்க்கு உயிரையும் உடம்பையும் ஏனைய பொருள்களையும் கொடுத்தலும், தக்கோர்க்குச் செய்யும் ஆராதனைகளுமாகிய இவற்றை நானே ஏற்றுக்கொண்டு பலன் றருவன் என்று அறிவாயாக எ - று.

(க - ரை.) அனைவராலும் செய்யப்படும் தவம், தருமம், தானம் முதலியவற்றை நானே ஏற்றுக்கொண்டு பலன்றருவன் என்பதாம்.



போற்றரிய என்பது நிற்றற்குரிய எல்லா விடங்களிலும் சென்று பொருந்துமாதலின், புனல் வெயில் என்றவிடத்து குளிருங் கோடையும் வருவிக்கப்பட்டன.

ஏற்றவருக்கு உயிர் கொடுத்தலுண்டென்பது, † இந்திரனுக்கு வலாசுரன் பசுவாய் வேள்விக்கு உபகாரமாகி உயிர் துறந்தமையின் வைத்தறியப்படும்.

உடல் கொடுத்த லுண்டென்பது, ¶ புறுவினது அழிவிற்கு அஞ்சித் தன் அழிவிற்கு அஞ்சாது துலாத்தட்டி லேறிய அரசனது செயலில் வைத்தறியப்படும்.

பூசையென்பது இவ்விடத்து தக்கோர்க்குச் செய்யும் ஆராதனையோடு கூடிய தானத்தில் மேல் நின்றது.

எல்லாராலும் செய்யப்படும் எல்லாச் செயல்களையும் இறைவன் ஏற்றுக்கொண்டு பலன்றருவன் என்பது, * "இதம் அகிதங்க ளெல்லாம் இறைவனே ஏற்றுக்கொண்டு இங்கு - இதம் அகிதத்தால் இன்பத் துன்பங்கள் ஈவன்." என்பதனானும் அறியப்படும்.

உயிர்கள் செய்யும் செயல்களை இறைவன் ஏற்றுக்கொள்ளுதற்குக் காரண மென்னையெனின், எச்செயலும் பலன் கருதியே செய்யப்படும். செய்த உயிர், எப்பொழுது எந்த வழியாகப் பலன் வருமென்று அறிய முடியாத சிற்றறிவினையுடையது. செய்யப்படும் செயல், செய்த உயிரைப் பலன்ரூபமாய்ச் சென்று கூடும் அறிவில்லாத சடம். ஆகையால் இவ்விரண்டின்வேறாகியும் உயிரோடு பிரிப்பின்றிக்கலந்தும் நிற்கும் இறைவன், உயிரின் விருப்பம் நிறைவேறுதற் பொருட்டு வினைப்பலனை உயிருக்குக் கூட்டுவன் என்பது பாரிசேட அளவையாற் பெறப்படும். அங்ஙனம் கூட்டுதற்குக் காரணம் கருணையே யன்றிப் பிறிதில்லை யென்க. இவ்வுண்மை, 0 "இறைவனிங் கேற்ப தென்னையிதமகி தங்களென்னின் - நிறைபரனுயிர்க்கு வைத்த நேசத்தினிலைமை யாகும்" என்பதனாலும் அறியப்படும். கருணையேயன்றிக் கடமையுமாம் என்பது § ஆண்டுப் பின்னர்க் கூறப்படுமாற்றாற் றெளியப்படும்.

ஏற்றுக்கொள்ளுதலாவது, அவ்வப்பொழுது அறிந்து வைத்தல். ஏற்றுக்கொள்ளுதல் கூறவே பலன்றருதலுங் கூறினாராயிற்று. (௪௪)

---

† திருவிளையாடற் புராணம். மாணிக்கம் விற்றபடலம்.

¶ புறநானூறு செ. ௪௩.

* சிவஞானசித்தியார் உ-ம் சூ-ம். செ. ௧௫.

0 சிவஞான சித்தியார் உ-ம் சூ-ம் செ. ௧௪.

§ ஷை ஷை செ. ௨௨.

(அ - கை.) சீவன் முத்தருக்கும் ஏனைய பெத்தருக்கும் நானே உறவினன் எனக் கூறுகின்றார்.

45. ஆனநிலை யாவுடைய பூதங்க ளனைத்துநான்
ஏனையவை யாவையுள வெவையுநான் றூலநுண்மை
ஆனவியா வையுமல்லே னெனையறியி னறிவோர்க்கு
ஞானமொன் றுமென் னுருவ நானேயெவ் வுயிர்க்குறவும்.

(இ - ள்.) நிலைஆனயா உடைய - (உலகத்தின்கண்) நித்தமாயிருக்குந் தன்மையினை எவை உடையனவோ (அவ்வுயிர்களும்), பூதங்கள் - பூதங்களின் காரியமாகிய உலகமும் (ஆகிய), அனைத்தும் நான் - அனைத்தும் நான், ஏனையவை யாவை உள எவையும் நான் - உயிர்களுக்கும் உலகத்துக்கும் வேறானவையாய் எவை உள்ளனவோ அவையனைத்தும்நான், தூலம் - (இவ்வாறு எல்லாமாய் விளங்குதல்) என்னுடைய தூலநிலையாகும், ஆன இயாவையும் அல்லேன் - (ஆயினும்) ஆகிய இவையனைத்தும் அல்லாதவனாக விளங்குவேன், நுண்மை - இது என்னுடைய சூக்கும நிலையாகும், எனை அறியின் - என்னை உண்மையாக அறியுமிடத்து, அறிவோர்க்கு என் உருவம் ஞானம் ஒன்றும் - அறிபவர்க்கு எனது சொரூபம் ஞானம் ஒன்றுமேயாகும், எவ்வுயிர்க்கு உறவும் நானே - இவ்வாறு அறிந்தார் அறியாதார் முதலிய அனைத்துயிர்கட்கும் உறவினனாயிருப்பவனும் நானே எ - று.

(பொ - ரை.) உலகத்தின்கண் நித்தமாயிருக்குந் தன்மையினை எவை உடையனவோ அவ்வுயிர்களும், பூதங்களின் காரியமாகிய உலகமும் ஆகிய அனைத்தும் நான். உயிர்களுக்கும் உலகத்துக்கும் வேறானவையாய் எவை உள்ளனவோ அவை யனைத்தும் நான். இவ்வாறு எல்லாமாய் விளங்குதல் என்னுடைய தூலநிலையாகும். ஆயினும் ஆகிய இவையனைத்தும் அல்லாதவனாக விளங்குவேன். இது, என்னுடைய சூக்கும நிலையாகும். என்னை உண்மையாக அறியுமிடத்து, அறிபவர்க்கு எனது சொரூபம் ஞானம் ஒன்றுமேயாகும். இவ்வாறு அறிந்தார் அறியாதார் முதலிய அனைத்துயிர்கட்கும் உறவினனா யிருப்பவனும் நானே எ - று.

(க - ரை.) என்னுடைய உண்மை நிலையை அறிந்த முத்தருக்கும் ஏனையோருக்கும் உறவினனாய் விளங்குபவன் நானே என்பதாம்.

பூதங்க ளென்பது பூதங்களின் காரியமாகிய உலகத்தைக் குறித்தது.
ஏனையவை - தத்துவதாத்துவிகங்கள்.

இறைவன், எங்கும் நிறைந்திருத்தல்பற்றி எல்லாமாய் விளங்குதலும், அவற்றிற் கட்டுப்படாமை பற்றித் தனித்து விளங்குதலுமாகிய இருநிலையினை உடையன். இவற்றுள், முன்னையது தூலம். பின்னையது சூக்குமம். தூலமெனினும் தடத்தமெனினும் ஒக்கும். சூக்குமம், சொரூபம், உண்மையென்பன ஒரு பொருட் சொற்கள். தூல நிலையில் பொருள்களனைத்தும் திருமேனி. சூக்கும நிலையில் ஞானமே திருமேனி.



உயிர்களுடன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று, அவ்வுயிர்கள் செய்யும் வினைகளுக்குத் தக்க பலனை அவற்றிற்கு ஊட்டி, இருவினையொப்புவரச் செய்து, மலசத்தியைத் தேய்த்து, சத்திபதிப்பித்துத், தனது உண்மை நிலையை விளக்கி, நீங்காத சிவானந்தத்தை அநுபவிக்கச் செய்தலின், உறவினன் என்றார். இக்கருத்தினை ‡"உலகெலாமாகி வேறாயுடனுமா யொளியாயோங்கி - அலகிலா வுயிர்கள் கன்மத்தாணையி னமர்ந்து செல்லத் - தலைவனா யிவற்றின்றன்மை தனக்கெய்தலின்றி" என்பது முதலிய திருவாக்குகள் வலியுறுத்துமாறு காண்க. (சரு)

(அ - கை.) தன்னுடைய உண்மை நிலையை விளக்கிக் கூறுகின்றார்.

46. இல்லாத விடமில்லை யெனக்குமல மியாதுமிலை
எல்லாருந் தொழுமீச னெனக்கவத்தை யெவையுமிலை
வில்லாரும் புருவத்து வேலாரும் விழியாய்கேள்
நில்லாத வுலகத்தை மிகநீங்கி நிற்பேனான்.

(இ - ள்.) வில்ஆரும் புருவத்துவேல் ஆரும் விழியாய்கேள் - வில்லையொத்து வளைந்திருக்கும் புருவத்தையும் வேலையொத்துக் கூர்மையாயிருக்கும் கண்களையும் உடையவளே கேட்பாயாக, யான் இல்லாத இடம் இலை - நானில்லாதஇடம் இல்லை, எனக்கு மலம் இயாதும் இலை - எனக்கு ஆணவம் முதலிய மலம் ஒன்றுமில்லை, எனக்கு அவத்தையெவையும் இலை - எனக்குக் கேவலம்முதலிய அவத்தைகளனைத்துமில்லை, நில்லாத உலகத்தை மிக நீங்கி நிற்பேன் - நிலைபெறுதலின்றி அழியும் உலகத்தை ஒரு சிறிதும் பற்றாது நீங்கி நிற்பேன், நான் எல்லாரும் தொழும் ஈசன் - (ஆகையால்) நான் அனைவரும் வணங்கும் தலைவன் எ - று.

(பொ - ரை.) வில்லையொத்து வளைந்திருக்கும் புருவத்தையும் வேலையொத்துக் கூர்மையாயிருக்கும் கண்களையும் உடையவளே! கேட்பாயாக. நானில்லாத இடமில்லை. எனக்கு ஆணவம் முதலிய மலம் ஒன்றுமில்லை. எனக்குக் கேவலம் முதலிய அவத்தைகள் அனைத்துமில்லை. நிலை பெறுதலின்றி அழியும் உலகத்தை ஒரு சிறிதும் பற்றாது நீங்கி நிற்பேன். ஆகையால், நான் அனைவரும் வணங்கும் தலைவன் எ - று.

‡ சிவஞானசித்தியார் உ-ம் சூ-ம் செ. க.

(க - ரை.) நான், எல்லாமாய் நிற்பினும் மலமில்லாமையால் பற்றின்றி நீங்கி நிற்பேன் என்பதாம்.

மலம், ஆணவம் கன்மம் மாயை யென மூன்றெனவும், மாயேயம், திரோதாயி யென்னும் இரண்டுடன் ஐந்தெனவுங் கூறப்படுமாதலின், அவற்றுள் ஒன்றும் இல்லை யென்பது தோன்ற யாதும் இல்லையென்றார்.

எவ்விடத்தும் நிறைந்து எல்லாப் பொருள்களுடனுங் கலந்து நிற்பினும், மலமில்லாமையால் அவத்தையில்லை; அவத்தையில்லாமையால் உலகத்தைக் கடந்து நிற்கின்றேன்; அதனால் எல்லாரும் தொழுந் தலைவன் என்பது கூறுதற் பொருட்டு, மேலைச் செய்யுளிற் பெறப்பட்ட பொருளை, யானில்லாத இடமில்லையென அநுவதித்தார்.

நீங்கி நிற்றல் கடந்து நிற்றல் மேம்பட்டு நிற்றல் என்பன ஒருபொருட் சொற்கள்.

மேம்பட்டு நிற்றலே தலைமையாதற் குரிய தருமமாதலின், நீங்கி நிற்பேன் ஆகையால் எல்லாரும் தொழும் ஈசன் என்றார். ஆகையால் என்பது வருவித்துரைக்க.

மிக என்பது சிறிதும் பற்றுமையைக் குறித்தது. (சசு)

(அ - கை.) சீவன் முத்தன் தன்னைச் சிவமெனக் காணும் இயல்பினை, முடிந்தது முடித்த லென்னும் உத்தியால் முடித்துக் காட்டுகின்றார்.

47. ஒன் றுடனுந் தோய்வில்லா னொத்தார்மிக்
காரில்லா னுலக மில்லான்
நின் றநினை வுக்கெட்டா நித்தன்கா
ணப்படா னெஞ்சி னிற்பான்
பொன் றுபிறப் பிலிமுதலா மறிவினனிட்
களன்பழையோன் பொருள்க ளில்லோன்
என் றுநினைந் தடிக்கடியும் பிரமமென
நோக்குதலே யியல்ப தாகும்.

(இ - ள்.) ஒன்று உடனும் தோய்வு இல்லான் - (நான்) ஒன்றினும் பற்றில்லாதவன், ஒத்தார் மிக்கார் இல்லான் - ஒப்பானவரும் மேலானவரும் இல்லாதவன், உலகம் இல்லான் - உலகத்தைக் கடந்தவன், நினைவுக்கு எட்டா நின்ற நித்தன் - உலகப் பொருளை நினைக்கும் நினைவிற்கு எட்டாது நிற்கும் அழிவில்லாதவன், காணப்படான் - கண்ணிந்திரியத்திற்குக் காணப் படாதவன், நெஞ்சில் நிற்பான் - மனத்தினுள்ளே நிற்பவன், பொன்று பிறப்பு இலி - இறத்தல் பிறத்தல் இல்லாதவன், முதல் ஆம் அறிவினன் -

# செய்தித்திரட்டு.

ஐயரவர்களின் சதாபிடேகம்:— தமிழ் மக்கட்கு அரும்பெறல் தாயினும் ாவுடைய் மகாமகோபாத்தியாய திராவிட வித்யாபூஷண தாக்ஷிணாத்தியகலா ி டாக்டர் உயர்திரு உ. வே. சாமிநாதையரவர்களுக்கு எண்பதாண்டு நிறைவு ாபிடேக மகா வைபவ விழாவை, சென்னை திருவேட்டீசுவரம்பேட்டை, பிள்ளை ர் கோயில் தெருவிலுள்ள அவர்கள் மாளிகையாகிய தியாகராஜ விலாசத்தில் ாசி உகூ யன்று அவர்களின் அருமைத் துணைவர், வே. சுந்தரம் ஐயர், நமது ஐயரவர்களின் அருமைத் தனயர் S. கல்யாணசுந்தரம் ஐயர் ஆகிய திருவாளர் களும், மாணவர்களும், நண்பர் உறவினர்களும் கனம் பி. டி. ராஜன் முதலான பிரபலஸ்தர்களும் கூடியிருந்து மிகச் சிறப்பாகச் செய்தனர். கனம் பி. டி. ராஜன் முதலானவர்கள் ஒரு நிதி சேர்த்து ஐயரவர்கட்குப் பொற்கிழி யளித்த னர். யாவரும் ஐயரவர்களின் அரிய பெரிய திறமைகளைப் புகழ்ந்து பாராட்டிப் போற்றினர். ஐயரவர்கள் அனைவருக்கும் நல்லாசி வழங்கினர். ஒரு குறைவுமின்றி இறைவர் திருவருளால் இனிது நிறைவேறியது.

ஒரு நல்ல சந்தர்ப்பம்:— ஸ்ரீமத் மகா கோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சா நாத ஐயரவர்களுடைய எண்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அவர்க ளுடைய பதிப்பு நூல்களை ரொக்க விலைக்கு வாங்குபவர்களுக்கு 30—4—1935 வரையில் மூன்றில் ஒரு பங்கு கமிஷன் கொடுக்கப்பெறும். வேண்டுவோர் K. சுப்பிரமணியன் மானேஜர், தியாகராஜ விலாஸம், திருவல்லிக்கேணி என்ற விலாசத்திற்கு எழுதிப் பெறலாம்.

தஞ்சாவூர்:— தஞ்சை "சைவ சித்தாந்த சபையின் ஐந்தாம் ஆண்டுவிழா ி கூ மாலை உயர்திரு சச்சிதானந்த சுவாமியவர்கள் தலைமையில் ம்பரம் திரு. முத்துகிருஷ்ண பிள்ளை, வித்வான் திரு. மறை. திருநாவுக்கரசு ரு. சரவண முதலியார், சைவ சித்தாந்த இளைஞர் சங்க அங்கத்தினர் திரு. சஷாத்திரி, திரு. இராமையா என்னும் இருவர், தமிழ்ப்பண்டிதர் திரு. சிவ தருநாத பிள்ளை ஆகியவர்கள் முறையே கடவுளைக்கண்ட கருணையாளர், இயற்கை ரற்றமும் இறைவன் தோற்றமும், ஆத்திக நாத்திக அளவளாவல், விலாவிறச் சிரித்திட்டேன், என்னும் விரிவுரைகளாற்ற இனிது நிறைவேறியது. தலைவர் முன்னுரை முடிப்புரைகளில் சைவ சமயம்; அதன் உயரிய கருத்து; பரந்த ாக்கம்; சைவ சமயிகள் நடந்து கொள்ளவேண்டிய விதிகள் ஆகியவைகளைக் கற்றோரும் மற்றோரும் எளிதில் உணரத் தெளிவாகக் கூறியருளினார்கள். வந்தி ருந்த மாபெருங் கூட்டத்தினரனைவரும் தலைவரும் விரிவுரையாளர்களும் ஆற்றிய பிரசங்கங்களைப் புகழ்ந்து போற்றினர்.

தஞ்சை சைவ சித்தாந்த இளைஞர் சங்கத்தின் நான்காவதாண்டு விழா மதுரையில் சைவசித்தாந்த சமாஜத்தாபகரும், தஞ்சை அரசர் அறநிலையப்பாது காப்பாளருமாகிய சைவத்திருவாளர், T. M. சோமசுந்தரம் பிள்ளை B. A., B. L. அவர்கள் தலைமையில் இம்மதி சுகஉ நடைபெறும்.

ஆத்தன்குடி:—"சநாதன தர்ம மகா சபையின் இரண்டாவதாண்டு விழா, வேதபாடசாலைக் கட்டிடத்தில் மாசி உகூ தேதியூர் பிரம்மஸ்ரீ சுப்பிரமணியசாஸ் திரியாரவர்கள் தலைமையில் நன்கு நடைபெற்றது.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MAR 1935

திருப்போரூர்:—ஒன்றணைந்து இரண்டுடைந்து மூன்றுகெடுத்து ந[illegible] கடக்கி ஐந்துவென்று ஆறகற்றி எழுமெய்யறிவுடையார் எண்குண[illegible] நவந்தருபேதத்து நாதனைநாடி நற்றவஞ்செய்யும் அற்புதப்பெ[illegible] ளுட்சிறப்புற்றோங்கி விளங்கும் திருப்போரூர் எனும் [illegible] க்ஷேத்திரத்தி[illegible] சரவணப்பொய்கைத் தீர்த்தக்கரை மண்டபத்தில் தைமாதம் 4-உ கிருத்திகை காலை9மணி யளவில், தொண்டைநாட்டு மாங்காடு எனும் கிராமத்திலிருந் ஓரடியவர் சில மச்சங்களைத் துண்டுபடுத்தி பாகம்செய்து ஓர்மட்கலத்திற்பெய் காவடிகட்டிக்கொண்டு 30 மைல் பாதசாரியாகவே வந்தனர். காவடியை மண் பத்திலிறக்கி சோடசோபசார பூஜைகள் முடிந்தவுடன் அவிழ்த்தார்கள்.

துண்டு துண்டாக நறுக்கிப் பாகம்செய்யப்பட்ட மச்சங்கள் 5 அங்குல முள்ள உயிருள்ள மச்சங்களாகவும், தண்ணீரும்சேரும்கூடியிருந்தன. சரவணப் பொய்கையில் துள்ளிக் குதித்தோடின. அங்கு, கூடியிருந்த அடியவர்களெல்லாம் கண்டதிசயித்தனர். சிலர், இனி மச்சம் புசிப்பதில்லை என முருகப்பெருமானார் சந்நிதியில் சங்கற்பித்துக் கொண்டனர். சென்ற ஆனிமாதம் கிருத்திகை தினம் தரிசனார்த்தமாகச் சென்ற அடியேனுக்கு குளிரும் காய்ச்சலும் (104டிக்ரீ) கண்டி ருந்தன. சரவணப்பொய்கையில் மூழ்கி எழுந்தேன், குளிரும் சுரமும்நீங்கி முருகப்பெருமானார் முழுமுதற் பெருங்கருணையால் சுகமே வந்துசேர்ந்தேன். என, திரு. நல். கண்ணப்ப முதலியார் தெரிவிக்கிறார்.

புதுவை:— ஸ்ரீ சிதம்பரம் பாத பூஜை அம்பலத்தாடும் சுவாமிகளாகிய உயர்திரு முத்துசாமி சுவாமிகளின் முதல் வருட மஹா குருபூஜை இன்று சிறப்பாக நடைபெறுகிறது.

தூது கோஷ்டி:—பர்மா இந்திய தூதுக்கோஷ்டியினரும், அவர் களின் காரியதரிசியாகியவர்களும் (22-2-35) இங்கிலாந்துக்குப் போய்ச் சேர்ந்து இந்தியா காரியாலயத்தாரோடு நெருங்கியதொடர்பு கொண்டி ருக்கிறார்கள். பார்லிமெண்டு அங்கத்தினர்களைக்கண்டுபேசி பர்மா இந்தி யர்களுக்குப் பாதுகாப்புப்பெற முயல்கின்றனர்.

மன்னர்பிரான் ஆட்சிதொடங்கிய இருபத்தைந்தாண்டு நிறைவை முன்னிட்டு, மே 6வ வெள்ளிவிழாக் கொண்டாடப்பெறும். அதற்கு இந்திய மன்னர்கள் விஜயம் செய்வார்கள். தூதுக் கோஷ்டியின் தலைவ ராகச் சென்றிருக்கும் கனம் செட்டிநாடு ராஜா சர் அவர்களும் அவ்விழா விற் கலந்து மகிழ்வுற்று காரியசித்தி பெற்று தமது பரிவாரங்களுடன் சுகமே வருவார்களாக.

---

## "சிவநேசன்" ஆண்டுத்தொகை விவரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ 2--4--0 | அதற்கு மூலதனம் | ரூ 30--0--0 |
| அயல்நாட்டிற்கு | ரூ 3--0--0 | அதற்கு மூலதனம் | ரூ 40--0--0 |

தனிப்பிரதி அணா 0—3—0

## விளம்பரவிகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4—0—0

நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8—0—0

---

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர்
ராம. கு.ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.